# இலக்கு

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 9 · 20.01.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA · ilakku2009@gmail.com


## கொத்துக்குண்டுகள். புகைவதும். அணைவதுமாக.

வன்னிமகன்






## மன்னார் மனிதப் புதைகுழி சிறீலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான சாட்சியம்

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

## எந்தத் தேர்தல் ஆனாலும் எமக்கு வெற்றி நிச்சயம்

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்





## சனாதிபதியின் காலில் விழுந்து கதறிய எனது பேரப்பிள்ளைகளை அவர் ஏமாற்றிவிட்டார்.

- ஆனந்த சுதாகரனின் தாயார்
இலக்கு மின்னிதழுக்கு சிறப்புப்பேட்டி.

## கப்பல்கள் மூழ்கியதில் 170 அகதிகள் உயிரிழப்பு?



# எந்தத் தேர்தல் ஆனாலும் எமக்கு வெற்றி நிச்சயம்

## தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

எந்தத் தேர்தல் ஆனாலும் எமக்கு வெற்றி நிச்சயம் என தெரிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் ஸ்தாபகரும் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், எமது பயணம் மக்கள் நலம் என்ற இலக்கு நோக்கிய பயணமாக அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண மத்திய குழுக் கூட்டம் செயலாளர் நாயகத்தின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

நாம் மிகப்பெரிய சவால்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் கூட்டணியை தொடங்கியுள்ளோம். ஒருபுறம் எமது மக்கள் கடந்த 30 வருட கால போர்த் தாக்கங்களில் இருந்து இன்னமும் மீண்டுவரமுடியாத நிலையில் இருக்கின்றார்கள். மறுபுறத்தில் ஏற்கனவே காணப்படும் கட்சிகள் எமது மக்களைப் பிரதிநிதித்துவஞ் செய்வதாகக் கூறிப் போலி வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அரசாங்கங்களுக்கு சேவகம் செய்து பதவிகளையும் சலுகைகளையும் பெறுவதே இலக்காக கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள்.

இதனால் மக்கள் ஏமாற்றமும் சலிப்பும் அடைந்திருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு சூழலிலேயே எமது கட்சி ஒரு சிறு குழந்தையாகப் பிரசவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழந்தை விரைவாக எழுந்து நடந்து எம்மக்களின் வேலாகி பாதுகாப்புக் கவசமாகவும் அவர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் சக்தியாகவும் பரிணாமம் பெறுவது அவசியம். அதன் எதிர்காலம் உங்கள் கைகளிலேயே தங்கி இருக்கின்றது.

இந்த கட்சியை ஏன் தொடங்கவேண்டியிருந்தது என்பது சம்பந்தமாகக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தமிழ் மக்கள் பேரவையில் நான் ஆற்றிய

தொடர்ச்சி 9 ஆம் பக்கம் →

# ஊடக அமைப்புக்கள் பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு.

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இலங்கையின் சனநாயக விரோதச் செயற் பாடுகளை துணிச்சலுடன் பதிவு செய்த ஊடகவியலாளர்கள் பலர் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டதோடு ஊடகவியலாளர்கள் பலர் தாக்குதலுக்கும் உள்ளானதோடு கடந்தகாலங்களில் சிலர் காணாமலும் போயுள்ளார்கள். பாதிக்கப்பட்ட ஊடக வியலாளர்களுக்கு இன்றுவரை நீதிவழங்கப்படவில்லை என்பதோடு ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களும் தொடர்ந்து கொண்டே இருப்பதால் இலங்கையில் ஊடக சுதந்திரம் என்பது கேள்விக் குறியாகவே உள்ளதாகவே விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது.



இலங்கையில் உள்ள ஊடக நிறுவனங்கள் ஒன்றிணைந்து தமக்குரிய நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி இலங்கை பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யவுள்ளதோடு ஐநாஅலுவலகத்திலும் கோரிக்கை மனு வொன்றை கையளிப்பதற்கான ஒழுங்குகளை ஊடக அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன.

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன. ஊடகவிலயாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை மேற் கொண்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பது சனாதிபதி வழங்கிய வாக்குறு திகளில் ஒன்றாகும். எனினும் இதுவரையிலும் சனாதிபதி அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது இவ்வாறான நிலையில் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக கடுமையான அடக்கு முறைகளை மேற் கொண்டவர்கள் இதுவரையிலும் தண்டிக்கப்படாமால் அவர்கள் பாதுகாப்பாக சுதந்திரமாக நடமாடுவதை கண்டித்தே இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்படுவதாக அறியமுடிகிறது.

மேற்படி முறைப்பாட்டை எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு பொலிஸ் ஆணைக்குழுவில் முன்வைக்கவுள்ளனர.; அன்றைய தினமே கொழும்பில் உள்ள ஐ.நா. மன்றத்தின் அலுவலகத்திலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டி இணையவழி திரட்டப்பட்ட கையொப்பங்களையும் கோரிக்கை மனுவொன்றையும் கையளிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றனர்

# மீண்டுமொருமுறை நிரூபணமாகி உள்ள

## பௌத்த சிங்கள மேலாண்மை

சிறீலங்கா இராணுவத்தின் படைப்பிரிவுப் பிரதானியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த வாரம் ஜனாதிபதி சிறிசேனாவால் நியமிக்கப் பட்டுள்ளார். இது உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. இறுதிக்கட்டப் போரில் 58வது கட்டளைப் பிரிவு அதிகாரியாக செயற்பட்ட சவேந்திர சில்வா, பல்லாயிரக் கணக்கான பொதுமக்களின் படுகொலைகளுக்கும் முறையான முன்னறிவித்தலோடு சரணடைந்த விடுதலைப்புலிகளின் படுகொலைகளுக்கும் பாலியல் வல்லுறவுகள் உட்பட்ட அத்தனை கொடுங்காரியங்களுக்கும் காரணமானவர்களுள் மிக முக்கியமானவர். போர்க்குற்றவாளியாகவும் மனித நேயத்துக் கெதிரான குற்றவாளியாகவும் இனப்படுகொலையாளியாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட மிக முக்கியமானவரையே சிறீலங்கா இராணுவப் படைப்பிரிவுப் பிரதானியாக மிக முக்கியமான காலகட்டத்தில் நியமித்திருப்பது மிகுந்த கவனத்துக்குரியது.

ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்பட்ட இரண்டு வருட கால நீடிப்பு வருகின்ற மார்ச் மாதம் முடிவுக்கு வருகின்ற நிலையிலும் மன்னார் புதைகுழி விவகாரம் பூதாகரமாக வெளிவந்து கொண்டிருக்கும் சூழ்நிலையிலும் அண்மையில் ஏற்பட்ட சிறீலங்கா பாராளுமன்ற நெருக்கடியின் தாக்கம் ஓயாத நிலையிலும் கூட இந்த நியமனம் வந்திருப்பது சிறிலங்கா பௌத்த மேலாண்மைவாத சிந்தனையில் எந்த மாற்றமும் நிகழவில்லை என்பதையே மீண்டும் நிரூபணமாக்கி உள்ளது. அத்துடன் சர்வதேசத்தின் எந்த அழுத்தங்களும் தங்களிடத்தில் எந்த மாற்றங்களையும் கொண்டு வரப்போவதில்லை என்பதையும் சிறிலங்கா மேலும் ஒருமுறை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தி உள்ளது.

எங்களது மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வொன்றை பெற்றுத் தருவோமென இன்னமும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த நியமனம் சம்பந்தமாகவும் எங்கள் மக்களை ஏமாற்றுவதற்கான காரணங்களை ஏற்கனவே தேடிக் கண்டு பிடித்திருப்பார்கள். வருகின்ற மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் முடிவுற இருக்கின்ற கால நீடிப்பும் அது சம்பந்தமான தங்களது அணுகுமுறைகள் தொடர்பாகவும் பத்து தமிழர் அமைப்புக்கள் பத்து விதமான நிலைப்பாடுகளோடும் ஆரவாரிப்புக்களோடும் களம் காண காத்திருப்பார்கள். இன்றும் இத்தனையின் பின்பும் சுமந்திரனுக்கு கழுத்து முறியாத குறையாக மாலை அணிவிப்புக்கள். நாங்கள் எங்கு போய்க் கொண்டிருக்கின்றோம்?

சிங்கள பௌத்த மேலாதிக்கம் தங்களுக்குள் ஆயிரம் பிரச்சனைகள் இருந்தாலும் எங்கள் விடயத்தில் எப்போதும் ஒத்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றார்கள். இராணுவ வீரர் ஒருவரையும் நீதிமன்றத்தில் நிறுத்த மாட்டோமென நேற்றும் சிறிலங்கா நீதி அமைச்சர் இறுமாப்போடு கூறி இருக்கின்றார். எங்களது அரசியல் உரிமைக்காக, தலை நிமிர்ந்த வாழ்வுக்காக, எல்லா வகையான அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்காக தங்களது இனிய இளைய உயிர்களை களமாடி அர்ப்பணித்த வரலாற்றை பத்து வருடங்களுக்குள்ளேயே நாம் மறந்து விடப் போகின்றோமா? மீண்டும் மீண்டும் பதிவு செய்கிறோம். எமக்கான வாழ்வும் எமக்கான விடுதலையும் யாரின் கைகளிலும் தங்கி இல்லை. எம்மில் எமது எண்ண ஒருமிப்பில் எமது செயற்பாட்டு ஒருமிப்பில் நுனிப்புல் மேயாத ஆழமான பார்வையில் மீளெழுச்சியில் மட்டுமே எல்லாமே தங்கி இருக்கின்றது.

தாயகத்தில் எமக்கான உண்மையான அரசியல் தலைமை விரைந்து கட்டமைக்கப்பட வேண்டும். அதற்கான சிந்தனைத் தெளிவை எங்களது மக்களுக்கு நாம் கொடுத்தாக வேண்டும். திட்டமிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் எங்களது மக்களின் வாழ்வாதார பிரச்சனைகள் நீக்கப்பட வேண்டும். எங்களது மக்களின் பொருளாதாரம் எங்கள் கைகளில் இருக்க வேண்டும். தாயக நிலம் பாதுகாக்கப்பட வேண்டும். மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழர் தரப்பு ஒருமித்த நிலைப்பாட்டோடு அணுகுவதற்கான கலந்தாய்வுச் சந்திப்புக்களை உரிய அமைப்புக்கள் நிகழ்த்தியாக வேண்டும். தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையும் அரசியல் விடுதலையும் ஒவ்வொருவரின் வீட்டுப் பிரச்சனை அல்ல தாங்கள் தாங்கள் விரும்பியவாறு கையாள்வதற்கு. இது எங்களது இனத்தின் ஒட்டு மொத்த வேட்கை. தண்ணீர் விட்டு மட்டுமல்ல வியர்வையை, உழைப்பை, கண்ணீரை, குருதியை, கொடுக்க முடியாத உயிர்க் கொடைகளை கொடுத்து இனவிடுதலைப் பயிரை வளர்த்திருக்கின்றோம். இதனை கருக விடாதீர்கள். சிந்தனைத் தெளிவோடு ஈகிகளையும் எங்கள் மக்களையும் நெஞ்சிருத்தி பயணம் தொடர்வோம். வரலாறு எங்களுக்கு வழிகாட்டும்.

# கொத்துக்குண்டுகள்.. புகைவதும் அணைவதுமாக.

**வன்னிமகன்**



அண்மையில் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சட்டமூலம் (CHEMICAL WEAPONS CONVENTION ACT) சமர்ப்பிக்கப்பட்டது.அங்கு உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா யுத்தத்தில் சிறிலங்கா அரச படைகளால் அப்பாவி மக்கள் மீது கொத்துக்குண்டுகள் மற்றும் இரசாயன ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்டதாக குறிப்பிட்டார். குண்டுவீச்சில் காலொன்றை இழந்த தான் போரின் நேரடிச் சாட்சிகளுள் ஒருவர் என்பதையும் அங்கு சுட்டிக்காட்டினார்.

இதற்கு கீரியும் பாம்புமாகவுள்ள சிங்களக் கட்சிகள் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பையும் மறுப்பையும் ஏகமனதாக வெளிப்படுத்தின. சிறிலங்காவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன பாதுகாப்பு அமைச்சு எந்த ஆதாரங்களும் இல்லாத இத்தகைய குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாகக் குறிப்பிட்டார். அமைச்சர்களால் மட்டுமன்றி அரசுத்தலைவர், பிரதமர் போன்றவர்களாலும் அவ்வப்போது இவ்வாறான நிராகரிப்புகள் எந்தவித பொறுப்புணர்வுமின்றி வெளியிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறு குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுவதும் சிறிலங்கா அரசதரப்பு அதை மறுப்பதும் அத்துடன் அந்தவிடயம் மறக்கப்பட்டுவிடுவதும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

பொதுமக்கள் மீதான கொத்துக்குண்டுப் பாவனை, இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது என்பன மிக மோசமான போர்க்குற்றங்களாகும். அது ஒட்டுமொத்த மனித இனத்திற்கெதிரான குற்றமும் கூட.

ஆயினும் தமிழர் தரப்புகள் இந்த விடயம் மீது போதிய கவனம் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும். சிறிலங்கா அரசின் போர்க்குற்றச் செயற்பாடுகளை, இனவழிப்பை சர்வதேசரீதியில் ஆணித்தரமாய் நிறுவ இந்த கொத்துக்குண்டு, மற்றும் இரசாயன ஆயுதப் பயன்பாடு என்பன மிக அவசியமான விடயங்களாக அமைகின்றன.

இக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் ஒவ்வொரு முறையும் ஆதாரம் இருக்கிறதா என கேட்டுவிட்டு சிங்களம் அப்பால் சென்றுவிடுகின்றது. எம்மவரும் அதனை அத்துடன் விட்டுவிட்டு அகன்றுவிடுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்கெதிரான போரில் சிறிலங்கா படைத்தரப்பு இரசாயன ஆயுதங்களையும் கொத்துக் குண்டுகளையும் பயன்படுத்திவந்தமை மிகவும் வெளிப்படையான ஒரு விடயமே. குறிப்பாக இறுதிக்கட்ட போர்க்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் அதிகம் இடம்பெற்றதை அந்த போர்ச்சூழலில் வாழ்ந்த மக்கள் பார்த்தும் பட்டும் உணர்ந்தது மறுக்கமுடியாத உண்மையே. இன்றும் அவர்களில் அநேகர் எம்மிடையே இரத்த சாட்சிகளாக இருக்கவே செய்கின்றனர்.

இவற்றை தமிழர் தரப்புச் சாட்சியங்கள் என சிறிலங்கா தரப்பு மறுதலித்தாலும் வலுவான வேறு ஆதாரங்களை ஆணித்தரமாக நாம் எடுத்துக் காட்டமுடியும்.

இந்தவகையில் பாகிஸ்தானிய ஆயுத ஏற்றுமதி அமைப்பின் இயக்குனர் மேஜர் ஜெனரல் முஹமட் பாரூக் 2008 ஜூலை பாகிஸ்தானின் டோன் (Dawn) பத்திரிகைக்கு வழங்கிய ஒரு செவ்வி மிக முக்கியமானதாகும். அதில் சிறிலங்கா அரசாங்கம் பாக்கிஸ்தானிடமிருந்து கொத்துக் குண்டுகளை கொள்வனவு செய்ததாக அவர் தெரிவித்திருந்தார்..(It has been reported that Sri Lanka has purchased cluster bombs, deep penetration bombs and rockets and UAVs from Pakistan)



இந்த விடயம் சிறிலங்காப் படையினர் கொத்துக் குண்டுகளைக் கொள்வனவு செய்திருந்தனர் என்பதை உறுதிசெய்யும் வலுவான ஆதாரமாகும்.

மேலும் ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடிகள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசகர் அலன் போஸ்டன் (Allan Poston) சிறிலங்காவின் கொத்துக் குண்டு பாவனை தொடர்பில் ஐ.நாவுக்கு தகவல் தந்திருந்தார். கிடைக்கப்பெற்ற ஒளிப்படங்கள் மற்றும் மற்றும் சிதறுதுண்டுகளை ஆராய்ந்ததில் தான் இந்த முடிவிற்கு வருவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்..("After reviewing additional photographs from the investigation teams, I have determined that there are cluster sub-munitions in the area where the children were collecting scrap metal and in the house where the accident occurred.)

ஐ.நாவின் கண்ணிவெடி தொடர்பான நிபுணர்கள் தமது நடவடிக்கைகளின் போது வன்னியில் வெடிக்காத கொத்துக்குண்டுகளைதாம் மீட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். (A report from a U.N. mine removal expert says unexploded cluster munitions have been found in northern Sri Lanka)

இந்த விடயங்கள் சிறிலங்கா படைத்தரப்பின் கொத்துக்குண்டு பயன்பாட்டை உறுதிசெய்யும் புறச்சான்றாக உள்ளது.

இவற்றிற்கு அப்பால் கொத்துக்குண்டு சிதறல்களை உடலில் தாங்கி இன்றும் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் எமது மக்கள், போராளிகளை அறிவியல் மருத்துவ சோதனைகளுக்கு உட்படுத்தி இந்த கொத்துக்குண்டுப் பயன்பாட்டை சர்வதேச மட்டத்தில் மறுக்கமுடியாத போர்க்குற்றமாய் பதிவுசெய்யமுடியும்.

சிறிலங்காப் படைகள் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட இத்தகைய கொத்துக்குண்டுகளை மாத்திரமின்றி தடைசெய்யப்பட்ட வேதியல் ஆயுதங்களையும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளன. இதனையும் சிறிலங்கா அரசதரப்பு மறுத்தே வருகிறது.

ஆனால் இறுதிக்கட்ட போரின் போது வன்னியில் பணியாற்றிய வைத்தியர்களின் குறிப்புகளும்'சாட்சியங்கள் இல்லாத போர்' — ( War Without Witness )அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சுயாதீனமான விசாரணையின் முடிவுகளும் இரசாயன ஆயுதப் பயன்பாட்டை அறிவியல் ரீதியில் நிரூபித்து நிற்கின்றன.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம் →

2ஆம் பக்கத் தொடர்ச்சி

# கொத்துக்குண்டுகள்..புகைவதும் அணைவதுமாக.

சிறிலங்காப் படையினரால் வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமையும் அதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டமையும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இந்த ஆரம்பகட்ட முடிவுகள் இங்கிலாந்தின் அனுபவம் வாய்ந்த வைத்தியர் ஒருவரால் மறுசீராய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் வேதியல் அறிக்கையின்படி காயங்களில் Triethanol-amine (C6H15NO3) , Phosgene (CCl2O) போன்ற வேதியல் பொருட்கள் காணப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக பொஸ்பரஸ் குண்டுகளை மக்கள் இலக்குகளில் வீசுவதும் போர்க்குற்றம். சிறிலங்கா படைத்தரப்பு இந்த வகைக்குண்டுகளை மக்கள் மீது வீசி அவர்களை எரித்தழித்ததும் கண்முன்னே நாம் கண்ட காட்சிகள்தான்.

சிறிலங்காவின் போர்க்குற்றம் தொடர்பில் பல்வேறு சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ள இந்த வேளையில் அதற்கு வலுச்சேர்க்கக் கூடிய கொத்துக்குண்டுப் பாவனை மற்றும் இரசாயன ஆயுதப் பாவனை என்பன தொடர்பில் வலுவான குரல்கள் சர்வதேச அரங்கில் எழுப்பப்பட வேண்டும்.

இவைதொடர்பில் மேலும் வலுவான ஆதாரங்கள் திரட்டப்பட வேண்டும் . அவை சர்வதேச ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்துமளவிற்கு பல்வேறு தரப்பிற்கும் எடுத்துச்செல்லப்பட வேண்டும் .

இந்த இனவழிப்புக்கான நீதி தேடலானது தமிழரின் உணர்வு வெளிப்பாடு என்ற வரையறைக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுவிடாது அறிவார்ந்த அனைத்து வழிகளிலும் அதற்கான முனைப்பை முன்னெடுக்க வேண்டும்.

# சிறிலங்காவில் இராணுவத்தளம் - அமெரிக்கா மறுப்பு

சிறிலங்காவில் தளம் அமைப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக வெளியாகிய செய்திகளை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது. திருகோணமலையில் தளம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்காவுக்கு சிறிலங்கா அரசாங்கம் அனுமதியளிக்கவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜெயசேகர நேற்று முன்தினம் குற்றம்சாட்டியிருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் நான்சி வான் ஹோர்ன்,“சிறிலங்காவில் இராணுவத் தளத்தை நிறுவுவதற்கு அமெரிக்கா முயற்சித்து வருவதாக வெளியான தவறான செய்திகளை அமெரிக்க தூதரகம் அறிந்திருக்கிறது. இந்த செய்திகள் முற்றிலும் தவறானவை. அதேவேளை, அமெரிக்க— சிறிலங்கா இராணுவ ஒத்துழைப்பானது, அனர்த்த தயார் நிலை, நிவாரணம், கடல் பாதுகாப்பு பயிற்சி, மற்றும் பயிற்சிகளை வலுப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளதே அன்றி, அமெரிக்காவின் தளம் ஒன்றை அமைப்பது, அதன் ஒரு அங்கமாக இருந்த தில்லை, இதனை நிறுவுவது தொடர்பாக கலந்துரையாடல்களும் நடத்தப்படவில்லை.” என்று கூறியுள்ளார்.

# பன்னாட்டு சுயாதீன விசாரணையே ஈழத்தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டும்!

## ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரிகளிடம் தமிழ்ப் பிரதிநிதிகள் வலியுறுத்தல்

பன்னாட்டு சுயாதீன விசாரணையே ஈழத்தமிழர்களுக்கு உண்மையான நீதியை நிலைநாட்டும் — ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரிகளிடம் தமிழ் பிரதிநிதிகள் வலியுறுத்தி கடந்த புதன்கிழமை 16.01.2019 அன்று புருசல் மாநகரில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிப்புற நடவடிக்கை சேவையின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் தலைமை அதிகாரிகளுடனும் சிறிலங்காவுக்கான உயரதிகாரியுடனும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தந்த தமிழ் பிரதிநிதிகள் முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தி உள்ளனர்.

இச் சந்திப்பில் பிரதானமாக தாயகத்தில் இன்றும் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் கட்டமைப்புசார் இனவழிப்பு வடிவங்கள் தொடர்பாக ஆழமாக எடுத்துரைக்கப்பட்டதோடு சிறிலங்கா அரசாங்கம் ஒரு புறம் ‘நல்லாட்சி’ அரசாங்கம் எனும் வேடம் தரித்தபடி சர்வதேசத்தை ஏமாற்றி வருகின்றதையும் மறுபுறம் தமிழர் தாயகத்தில் பல்வேறு மனிதவுரிமை மீறல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதோடு தமிழர் தாயகத்தை முற்றாக சிங்களத்துவமாக மாற்றியமைக்கவும்,தமிழ்ச் சமூகத்தை மிரட்டும் போக்கினைக் கைக்கொண்டு தமிழ்ச் சமூக விழுமியங்களை அது நிலைகுலைய வைப்பதையும் முனைப்பாக செய்துவருகின்றதை தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் கோடிட்டுக் காட்டினர்.



சிறிலங்கா அரசாங்கமானது 2015 ஆண்டு ஒக்டோபர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட முக்கிய விடயங்களை மதிக்காமல், அங்கு வழங்கிய வாக்குறுதிகளை வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தாமல், இவ் விடயம் சார்ந்த முக்கிய சர்வதேச உதவிகளை நிராகரிக்கும் வகையில் தனது நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினர்.

ஐநா மனித உரிமை பேரவையில் தொடர்ச்சியாக பல முறைகள் இலங்கை தொடர்பாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் தமிழர் தாயகத்தில் இன்றும் பல்வேறு வகையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இன்றுவரை சிறிலங்காவில் எந்த அரசாங்கமும் நீதி மறுப்பில் வேறுபாடின்றி தொடர்ந்து தன்பாதையில் நீதி மறுத்து வருகின்றது. தமிழ் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் , தமிழர்கள் காணிகள் அபகரிப்பு , தமிழர் தாயகத்தில் சிங்கள ராணுவ பிரசன்னம் ,தமிழர் தாயகத்தில் பௌத்தமயமாக்கல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தொடர் போராட்டம், அரசியல்— மற்றும் போர்க்கைதிகள் விடயம், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த நிலத்தில் மீள் குடியேற முடியாதநிலை எனப் பல விடயங்களில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை.

இந்நிலையில் இவ் அனைத்து சர்வதேச குற்றங்களையும் இழைத்த இனவழிப்பு சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் உள்ளக நீதி விசாரணை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எக்காலமும் நீதியை நிலைநாட்டாது என்றும் , கடந்த 70 வருட காலத்தில் கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையில் இப்பொறிமுறையில் தமிழ் மக்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை என்றும் , எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐநா மனிதவுரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் சிறிலங்காவுக்கு மீண்டும் எவ்வித காலநீடிப்பும் வழங்காத வகையில் பன்னாட்டு சுயாதீன விசாரணை யையே சர்வதேச சமூகம் கொண்டுவருவதன் ஊடாகவே ஈழத்தமிழர்களின் இனவழிப்பிற்கு உண்மையான நீதியை நிலைநாட்ட முடியும் என வலியுறுத்தினர்.

சிறிலங்காவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்தல் மற்றும் நீதி வழங்கல் பொறிமுறை என்பன குறித்த கடப்பாட்டினை அங்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமையானது வலுவிழக்கச் செய்துவிடும் என்ற அச்சத்தில் தாம் இருந்ததாகவும், இருப்பினும் நீதிக்காக தொடர்ந்து போராடும் தமிழர்களின் நிலையை தாம் மிகவும் கரிசனையோடு கவனத்தில் கொள்வதாகவும் , தாம் பிரயோகிக்கக் கூடிய அதிகமான அழுத்தத்தை அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக கொடுத்துவருவதாகவும் ஆனால் இப் படிமுறை ஒரு நீண்ட காலவரையறையை கொண்டதாகவே அமையும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிப்புற நடவடிக்கை சேவையின் உயரதிகாரிகள் தமது கருத்தாக தெரி—வித்தனர்.

இச் சந்திப்பின் உரையாடலின் நிறைவாக தமிழ் பிரதி—நிதிகளால் சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் எனவும், தமிழ் மக்கள் தமது அரசியல் வேணவாவை தாமே நிர்ணயிக்கும்

முகமாக ஐநா சபையின் கண்காணிப்பில் சர்வதேச வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் எனும் கோரிக்கைகள் அடங்கிய மனுவும் கையளிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் தமிழ் இளையோர்கள் சார்பாகவும், ஐரோப்பிய தமிழர் ஒன்றியத்தின் சார்பாகவும் , அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவையின் சார்பாகவும் பிரதிநிதிகள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மனிதப் புதைகுழி சிறீலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான சாட்சியம்

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

றுவாண்டாவில் நான்கு மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டதாகவும், அவை 1994 ஆம் ஆண்டு அங்கு இடம்பெற்ற போரில் படுகொலை செய்யப்பட்டவர்களினுடையது எனவும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட பி.பி.சி ஊடகம் கடந்த வருடத்தின் முற்பகுதியில் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

தலைநகர் கிகாலியின் புறநகர் மாவட்டமான கசாபோ பகுதியில் இந்த புதைகுழிகள் கண்டறியப்பட்டதாகவும், ஏறத்தாள 200 சடலங்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டதாகவும் இவை அனைத்தும் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் எனவும் பி.பி.சி மேலும் தெரிவித்துள்ளது.

அதே சமயம் கடந்த ஆண்டின் மார்ச் மாதமளவில் சிறீலங்கா படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் மாவட்டத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து 276 இற்கு மேற்ப்பட்ட எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த எலும்புக் கூடுகளில் 20 இற்கு மேற்பட்ட சிறுவர்களும் அடக்கம். ஏனையவர்களின் விபரங்களை அறிவதற்கு அல்லது வெளி—யிடுவதற்கு சிறீலங்கா அரசு அதிக அக்கறைகள் காண்பிக்கவில்லை.

இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்கும், உதவிகளை வழங்குவதற்கும் பல அமைப்புக்களும், அனைத்துலக நாடுகளும் முன்வந்தபோதும், அதனை சிறீலங்கா அரசு நிராகரித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மன்னார் மனிதப்புதைகுழிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும், தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் அமெரிக்காவும், கனடாவும் முன்வந்தபோதும் சிறீலங்கா அரசு அதனை நிராகரித்துவிட்டது.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தை வெளியுலகத்திற்கு மறைப்பதில் சிறீலங்கா அரசு அதிக கவனம் செலுத்தி வருகின்றது. அதாவது எந்த ஒரு சிங்களச் சிப்பாயையும் நீதிமன்றத்தில் நிறுத்தப்போவதில்லை என்ற அதன் கொள்கையில் சிங்கள அரசு தற்போதும் உறுதியாகவே உள்ளது.

எனவே தான் இந்த அகழ்வை மேற்கொள்ளும் பொறுப்பை நீதித்துறையின் மருத்துவ அதிகாரி ராஜபக்சா என்ற சிங்கள அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளது. ஒரு ஆண் தொல்பொருள் ஆய்வாளர் மற்றும் இரண்டு உதவியாளர்களுடன் ராஜபக்சா சிறீலங்கா அரசின் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகவே கருதப்படுகின்றது.

இந்த மனிதப் புதைகுழியானது, மன்னார் மாவட்டத்தின் நுழைவாயிலில் உள்ளது. அதற்கு அருகில் ஒரு வணிக வளாகமும், அதற்கு முன்பாக சிறீலங்கா படைத்தளமும் உள்ளது. கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக குழி தோண்டிய பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் இந்த புதைகுழி கண்டறியப்பட்டது.

அதன் பின்னர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் அகழும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சிறீலங்கா அரச அதிகாரியான ராஜபக்சா தலைமையிலான குழுவினர் முதலில் அகழ்ந்த இடத்தில் அதிகளவான எலும்புக்கூடுகள் காணப்பட்டபோதும், அது மயானம் என்று தாமாகவே முடிவை மேற்கொண்டு அதற்கு அருகில் உள்ள இடத்தில் அவர்கள் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

ஆனால் இடத்தை மாற்றுவதற்கு அவர்கள் கூறிய காரணம் ஏற்புடையது அல்ல என அவர்களின் பணியை பார்வையிடச் சென்ற தமிழகத்தை சேர்ந்த தடயவியல் நிபுணர் டாக்டர் சேவியர் செல்வ சுரேஸ் தெரி—வித்துள்ளார். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போர் முடிவுற்ற பின்னர் உண்மை நிலையை கண்டறிய அமைக்கப்பட்ட ஏழு பேர் கொண்ட குழுவில் சுரேசும் ஒருவர்.

முறையாக நீதிமன்ற அனுமதியுடன் சென்ற அவர்களை 15 நிமிடங்களே பார்வையிட ராஜபக்சா அனுமதித்ததாகவும், குழியினுள் இறங்கக்கூட அனுமதிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



மண்ணில் புதைந்துள்ள பெருமளவான எலும்புக்கூடுகள் இன்னும் தோண்டி எடுக்கப்படவில்லை என்பதுடன், குழியினுள் பிணங்கள் ஒன்றின் மேல் ஒன்று தூக்கி எறியப்பட்டு மண்போட்டு மூடப்பட்டதையே எலும்புக் குவியல்களின் சீரற்ற தன்மை எடுத்துக்காட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டெடுக்கப்பட்ட பிணங்களின் பாலினம் மற்றும் வயதுகளைக் கூட அறிவதில் சிறீலங்காவின் குழுவினர் அக்கறை காண்பிக்கவில்லை. சாதாரண உருவ இயலை வைத்து கணிக்கும் இந்த தகவல்களைக் கூட காபன் டேட்டிங் (கால அளவை முறை) கொண்டு கணித்த பின்னர் தான் கூற முடியும் என அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

சாதாரணமாக நான்கு பேர் கொண்ட அணியை அமைத்துள்ள சிறீலங்கா அரசு வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியரைக் கொண்டே அகழ்வை மேற்கொண்டு வருகின்றது. அதாவது இந்த விடயத்தை முக்கியத்துவமற்றதாக மாற்ற அது முனைகின்றது.

பிணங்களுக்கு சொந்தமான சில பொருட்கள் கண்டறியப்பட்டபோதும், உடைகள் கண்டறியப்படவில்லை. அதாவது துன்புறுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டு உடைகள் இன்றி பிணக்குவியல்களாக புதைக்கப்பட்டுள்ளார்கள்.

எலும்புக் கூடுகளின் கால்களில் காணப்படும் வளைந்த இரும்புகள் அவர்கள் துன்புறுத்தப்பட்டதற்கான அடையாளங்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

1990 களின் முற்பகுதியில் தனது 18 வயது மகனை இதே இடத்தில் வைத்தே சிறீலங்கா படையினர் கடத்திச் சென்றதாகவும், தனது மகனின் சடலமும் இந்த புதைகுழியில் இருக்கலாம் என மன்னார் பகுதியை சேர்ந்த தமிழ்த்தாய் ஒருவர் தெரிவித்துள்ளதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட இன்டிப்பெண்டன்ற் ஊடகம் தெரிவித்துள்ளது.

தனது மகன் வருவார் என தான் 27 வருடங்கள் காத்திருந்ததாகவும், ஆனால் அந்த நம்பிக்கை தற்போது உடைந்துவிட்டதாகவும் அவர் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார். அதாவது தனது மகனும் கொல்லப்பட்டு இந்த புதைகுழியில்த்தான் புதைக்கப்பட்டு இருப்பார் என்பது அவரது கருத்து.

இங்கு நாம் கருதவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், சிறீலங்கா இராணுவம் கைது செய்த இடத்தில் தான் புதைகுழி காணப்படுகின்றது என்பதால், அப்போது அது படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே சீனாவினால் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் புனரமைக்கப்பட்ட இந்த வீதிக்கு அடியிலும், அதற்கு எதிரில் உள்ள சிறீலங்கா படை முகாமின் கீழ் உள்ள நிலப்பகுதியிலும் பெருமளவான சடலங்கள் இருக்கலாம் என கருதப்படுகின்றது.

ஆனால் மிகவும் முக்கியமான இந்த விடயத்தில் சிறீலங்கா அரசோ அல்லது தமிழர்களின் அரசியல் அமைப்புக்களோ அதிக கவனம் செலுத்தவில்லை என்பதே இங்கு கவலையான விடயம்.

இறுதியாக இடம்பெற்ற போரில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும், ஏறத்தாள 30,000 இற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் நாடு முழுவதும் காணாமல் போயிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

றுவாண்டாவில் 200 சடலங்களைக் கொண்ட முதலாவது மனிதப்புதைகுழியை கண்டறிந்தவுடன், அங்கு காணாமல்போன 3,000 பேரின் சடலங்களாக அவை இருக்கலாம் எனவும் அதனை இனப்படுகொலை எனவும் அழுத்தமாகத் தெரிவித்த அனைத்துலக சமூகம். ஏறத்தாள 30,000 பேர் காணாமல் போனதுடன், 276 இற்கும் மேற்பட்ட

தொடர்ச்சி 10ஆம் பக்கம் →

# மட்டக்களப்பில் புதிய இராணுவ முகாம் அமைப்பு

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக முன்னெடுத்த ஆயுதப்போராட்;டம் முடிவுக்கு வந்து பத்து வருடங்களை நெருங்கியுள்ளது. 2009 பின்னர் தமிழர் பிரதேசத்தை முழுமையாக இராணுவ மயமாக்குவதில் இலங்கை அரசு முனைப்புடன் செயற்படுகிறது. தமிழர் பிரதேசங்களில் புதிய இராணுவ முகாம்கள் காவலரண்களை அமைப்பதில் இலங்கை இராணுவம் தீவிரம் காட்டிவருகிறது.

இலங்கை அரசபடைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது நிலங்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் சூழலில் இலங்கை அரசு பாதுகாப்பு நிதியை அதிகரித்து புதிய இராணுவ முகாம்களை அமைப்பதை ஊக்குவித்து வருவதை அவதானிக்கமுடிகிறது. இந்த நிலைப்பாட்டை உறுதி செய்வதைப்போல மட்டக்களப்பில் புதியதோர் இராணுவ முகாமை அமைப்பதற்கான முயற்சியில் இலங்கை இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

மட்டக்களப்பில் ஏறாவூர் பிரதேசத்திற்கு உட்பட்ட பன்னன்குடா தளவாய் என்ற கிராமத்திலேயே இராணுவம் முகாம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளை மேற் கொண்டு வருவதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார். இராணுவ முகாம் அமைப்பதற்கான செயற்திட்டமானது பதவியிலிருந்து மாற்றம் பெற்று சென்றுள்ள முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களின் ஒப்புதலுடனேயே முன்னெடுக்கப்படுவதாக செய்திகள் தெரிவிப்பதோடு இதற்கு அமைவாகவே நேற்று ஐம்பது ஏக்கர் காணி அளவீடு செய்யப்பட்டு காணி மீளாய்வு ஆணையத்தினால் இராணுவ முகாம் அமைப்பதற்கு



அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் அறிந்து அந்த பிரதேச மக்கள் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளதோடு இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை உடனே தடுத்து நிறுத்துமாறு அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

## காணி, காவல்துறை அதிகாரங்கள் வழங்கமாட்டோம் -மகாநாயக்கர்களுக்கு ஐதேக உறுதி

புதிய அரசியலமைப்பு யோசனை தொடர்பாக மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து விளக்கமளித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் குழு, மாகாண சபைகளுக்கு காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படாது என்றும் உறுதியளித்துள்ளது.ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் குழு, நேற்று முன்தினம் கண்டியில், மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து புதிய அரசியலமைப்புக்கான யோசனைகள் தொடர்பாகவும் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விளக்கமளித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புக்கான வரைவை அரசாங்கம் சமர்ப்பிக்கவில்லை என்றும்,வழிநடத்தல் குழுவின் யோசனைகள் தொடர்பான அறிக்கையே விவாதிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், எதிர்க்கட்சியினர் கூறுவது போன்று இது அரசியலமைப்புக்கான வரைவு அல்ல என்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மகாநாயக்கர்களிடம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை பாதுகாக்கப்படும் என்று அமைச்சர் தயா கமகே உறுதியளித்தார். மாகாணசபைகளுக்கு காணி, காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்படாது என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மகாநாயக்கர்களிடம் வாக்குறுதி அளித்தார்.எனினும் தற்போதைய நிலையில் புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்வதற்கு முயற்சி செய்வதை விட, தேர்தல்களை நடத்துவது நல்லது என்று மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கரான வண. திப்பொட்டுவாவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்களின் வாக்குரிமை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் கூறிய அவர், அரசியலமைப்பு உருவாக்கத்துக்குப் பின்னால் இருப்பவர்களுக்கு நாட்டை பிளவுபடுத்தும் எண்ணம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரான வண. வரகாகொட சிறி ஞானரத்ன மகாநாயக்க தேரரையும் ஐதேக குழுவினர் சந்தித்தனர். இந்தச் சந்திப்புத் தொடர்பாக அஸ்கிரிய பீடம் ஊடகங்களுக்கு எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.இந்தச் சந்திப்புகளில் அமைச்சர்கள் லக்கி ஜயவர்த்தன, பாலித ரங்கே பண்டார, ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மயந்த திசநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அடுத்த மாதம் மோடியைச் சந்திக்கிறார் மகிந்த – புதுடெல்லியில் இருந்து அழைப்பு

சிறிலங்காவின் புதிய எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்சவை புதுடெல்லிக்கு வருமாறு, இந்திய அரசாங்கம் அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளதாககவும் இந்த அழைப்பை ஏற்று, மகிந்த ராஜபக்ச அடுத்தமாதம் முதல் வாரத்தில் புதுடெல்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணத்தின் போது, மகிந்த ராஜபக்ச, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என்று, மகிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட செயலர் ஒருவர், கொழும்பு வார இதழ் ஒன்றிடம் தெரிவித்துள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் நாள் சிறிலங்காவில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், மகிந்த ராஜபக்ச புதுடெல்லிக்குப் பயணம் மேற்கொண்டு, இந்தியப் பிரதமரைச் சந்தித்திருந்தார்.

அரசியல் சதித்திட்டம் தோல்வியில் முடிந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுள்ள நிலையில் மகிந்த ராஜபக்ச மீண்டும் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

## கிளிநொச்சியில் முன்னாள் போராளி கைது!

கிளிநொச்சி பளை பகுதியைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவரைப் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.பளை கரந்தாய் பகுதியைச் சேர்ந்த சுதன்(வயது 40) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.குறித்த நபர் யுத்தத்தின் போது ஒரு காலையும் இழந்துள்ளார்.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை குறித்த நபரின் வீட்டினை சோதனையிட்ட போது , இரண்டு கைத்துப்பாக்கி , ஒரு கட்டத்துவக்கு மற்றும் 150 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதாகவும் , அதனுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தில் வீட்டில் பெற்றோருடன் வசித்து வைத்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரைப் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைக்காக வவுனியாவுக்கு அழைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒற்றையாட்சி என்பதில் மாற்றம் இருக்காது – சிறிலங்கா பிரதமர் உறுதி

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவது ஒரு நீண்ட பயணமாக இருக்கும் என்று சிறிலங்கா பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



காலியில் நேற்று நடந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரி— வித்துள்ளார்.

"நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, புதிய அரசியலமைப்புக்கான யோசனைகள் அடங்கிய அறிக்கை, குறித்து பலரும் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றனர். இவை யோசனைகள் மாத்திரமே. அரசியலமைப்புக்கான வரைவு இன்னமும் தயாரிக்கப்படவில்லை.புதிய அரசியலமைப்புக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமா என்பது நிச்சயமில்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அதனை நிறைவேற்ற முடியாது.புதிய அரசியலமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்த முனையவில்லை.புதிய அரசியலமைப்பில் நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையில் எந்த மாற்றமும் செய்யப்படாது.ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதே ஐதேகவின் நிலைப்பாடு. நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாக்க எந்தத் திட்டத்தை ஆதரிக்கவும் தயாராக இருக்கிறோம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தன்னிடம் உள்ள சட்டத்திறமைகளை பயன்படுத்தி தமிழ்மக்கள் மீது ஒற்றையாட்சியை திணிப்பதில் சுமந்திரன் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் கருத்து

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டிலான பொங்கல் நிகழ்வு முல்லைத்தீவில் நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்மக்கள் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை ஆதரித்து வாக்களிக்க வேண்டாம் என அக்கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்...

தமிழர்களின் தீர்வு பற்றி பேசுபவர்களிடம் மக்கள் கேட்கவேண்டிய கேள்வி எங்களுடைய வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்படுமா?,தமிழ் கலாச்சாரம் அழிக்கப்படுவதும்,வரலாறு திரிவுபடுத்தப்படுவதும் நிறுத்தப்படுமா? கடற்தொழில்,விவசாய இடங்கள் ஆக்கிர மிக்கப்படுவது நிறுத்தப்படுமா அதற்கு நீங்கள் கொண்டுவரும் தீர்வு வழிவகுக்குமா ? என்று கேட்கவேண்டும் கொண்டுவரும் தீர்வு இவற்றை நிறுத்தப்போவதில்லை என்று சொன்னால் அது தீர்வு அல்ல

இன்று தனிநாடு கோரமுடியாத நிலையில் இருக்கின்றோம் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு ஒருபோதும் எங்களுக்கு தீர்வாகாது இன்று கூட்டமைப்பினர் ஒற்றையாட்சி அரசியலமைப்பினை ஏற்றுக் கொண்டு பௌத்தம் அரசமதம் என்பதை ஏற்றுக்கொண்டு வடகிழக்கு இணைப்பினை கைவிட்டு தமிழர்களின் போராட்டம் பயங்கரமானது என்றும் அதனை வசைபாடிக்கொண்டு ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை ஏற்றுக்கொள்ள வைக்கின்ற நிலையினை கூட்டமைப்பு அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது

இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்பாக ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை கொண்டுவந்து நிறைவேற்றப்போவதாக கூட்டமைப்பு சூழுரைத்துள்ளது.ரணில் தெளிவாக சொல்லியுள்ளார் கொண்டுவரப் போவது ஒரு ஒற்றையாட்சிதான் பௌத்தம் அரசமதம் வடகிழக்கு இணைப்புக் இடம் இல்லை, சமஸ்டிக்கு இடமில்லை என்று தெளிவாக சொல்லியுள்ளார்.சுமந்திரனுடனும்,சம்மந்தனுடனும் இருக்கின்ற தனிப்பட்ட 15 பேரின் சுகபோகங்களுக்காக தமிழர்களின் எதிர்காலத்தினை அடைவு வைக்கமுடியாது

சுமந்திரன் மக்களை தன்னுடைய சட்டதிறமைகளை பயன்படுத்தி மக்களை ஏமாற்றி ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை ஏற்றுக்கொள்ள வைக்கின்ற சதி முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார். கூட்டமைப்பில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் சலுகைகளுக்கு கையேந்திவிட்ட கூட்டமைப்பினர் ஒற்றையாட்சி அரசியல் அமைப் பினை கொண்டுவருவதற்கு துணைபோய்க் கொண்டிருக்கின்றார்கள். அடுத்த மாதம் ஒரு ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு கொண்டுவரப்பட இருக்கின்றது. அது ஒரு பொதுசன வாக்கெடுப்பிற்கு வருகின்ற பொழுது அதற்கு நீங்கள் வாக்களிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. அந்த இடத்தில் வாக்கு சாவடிகளுக்கு சென்று இந்த ஒற்றையாட்சியினை நிராகரிக்கின்றோம் என்று புள்ளடி இடவேண்டும்.

எல்லோரும் இதனை செய்யவேண்டும் அரசு கொடுக்கின்ற பணத்திலே வீதிபோடுவதற்கு என்று சுமந்திரன் அள்ளி வழங்கிக்கொண்டிருக்கின்றார். கொண்டுவரப்போகும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை மக்கள் கேள்விகேட்காமல் ஏற்றுக்கொண்டு ஆதரிக்க செய்வதற்கான சதிதான் இன்று அவர் கிராமம் கிராமமாக அரச பணத்தை அள்ளி வழங்கிக்கொண்டு இருக்கின்றார்.

இது ஒரு தூக்கு கைதி தனது இறுதி ஆசையாக நீதிபதியால் நிறைவேற்றப்படுவதற்கு ஒப்பான விடயம் சுமந்திரன் இன்று ஊர் அபிவிருத்திக்கு என்று கொடுக்கப்படுகின்ற நிதி என்பது அந்த கிராம மக்களின் இறுதி ஆசையாகத்தான் இருக்கும். இது நீங்கள் பெற்றுக்கொள்ளப்போகின்ற கடைசி உதவியாகத்தான் இருக்கும் இந்த சலுகைகளுக்கு மயங்கிவிடாதீர்கள்ஒரு அமைச்சர் செய்யவேண்டிய வேலையினை அவர் செய்கின்றார்




உங்களுக்காக கேட்கின்றேன், உங்களின் பிள்ளைகளுக்காக கேட்கின்றேன்,எங்கள் வருங்கால சந்ததிக்காக கேட்கின்றேன் தயவு செய்து இந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை ஆதரித்து விடாதீர்கள்.

வரப்போகின்ற பாராளுமன்ற தேர்தலில் அல்லது மாகாணசபை தேர்தலில் எந்த ஒரு அரசியல்வாதியின் பேச்சினை நம்பி வாக்களித்துவிட்டால் பின்னர் அவர் உங்களை ஏமாற்றி விட்டார் என்று நீங்கள் இனம் கண்டால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் அவரை நிராகரித்து வீட்டுக்கு அனுப்பலாம் ஆனால் ஒரு அரசியல் அமைப்பின் மீது நீங்கள் வாக்களித்தால் அது உங்களின் ஏழு ஜென்மங்களுக்கும் உங்களை தீர்மானிக்கும் அழித்து அடிமையாக்கும் வரப்போகும் அரசியல் யாப்பு என்பது நீங்களாக விரும்பி உங்களுடைய பிள்ளைகளை சவக்குழிக்குள் கொண்டு சென்று இறக்கவேண்டும் என்பது சுமந்திரனுடைய வேண்டுகை. இந்த ஏமாத்திற்கு எடுபட்டுவிடாதீர்கள், தமிழர் இனத்தினுடைய எதிர்கால நலன் கருதி நான் சொல்லுகின்றேன் புத்தாண்டு பண்பாட்டு தினங்கள் தமிழர்களுடைய தினங்களாக தொடர்ந்து இருக்க வேண்டுமாக இருந்தால் எங்களுடைய பிள்ளைகள் தமிழ் கலாச்சாரத்துடன் இந்த மண்ணில் தேசத்தின் பொருளாதாரத்தினை கட்டி வளர்த்து சந்தோசத்துடன் வாழவேண்டுமாக இருந்தால் வரப்போகும் ஒற்றை யாட்சி அரசியல் அமைப்பு நிராகரிக்கப்பட்டே ஆகவேண்டும்.

ஜனநாயக அரசியல் தலைவர்களை படுகொலை செய்து கொண்டிருந்ததால் அந்த கொலைகளில் இருந்து தப்பித்து கொள்வதற்காகவே புலிகளுடன் ஒரு டீல் பேசி தாங்கள் தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்குள் வந்ததாக சயந்தன் சொல்லியுள்ளார். அதற்கு வக்காளத்து வேண்டுவது போன்று சுமந்திரன் அதனை நியாயப்படுத்தியுள்ளார்.

இந்த பிரதிநிதிகளுக்கு நான் ஒன்றினை சொல்ல விரும்புகின்றேன். புலிகள் பலவீனமான நிலையில் யாருடைய கால்களில் விழுந்தும் தங்களின் அங்கீகாரத்திற்காக பறந்து திரிந்தவர்கள் அல்ல. உங்களை போன்று அவர்கள் பலமான நிலையில் நின்றுகொண்டு தமிழ் இனத்திற்கு நன்மை தரக்கூடிய விடயங்களை மட்டும்தான் அவர்கள் ஏனைய தரப்பினருடன் இணங்கிக்கொண்டிருக்கின்றார்கள். 2001 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பினை உருவாக்கிய பொழுது விடுதலைப் புலிகள் வன்னிக்குள் முடக்கப்பட்டு பெருமளவான பிரதேசங்களை இழந்து போராளிகளை இழந்து மிக பலவீனமாக இருந்த பொழுது உங்களுடை கால்களில் விழுந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக விடுதலைப்புலிகள் கூட்டமைப்பினை உருவாக்கவில்லை நெஞ்சை நிமிர்த்தி அழிந்தாலும் இனத்தின் விடுதலைக்காக போராடிக்கொண்டே இருந்தார்கள். உலக வல்லரசுகளின் பலத்துடன் ஜெசிக்குறு படை நடவடிக்கையால் கைப்பற்றிய பிரதேசங்களை மீளதுடைத்தழித்து இராணுவத்தை துவம்சம் செய்து சீனவல்லாதிக்கம், அமெரிக்கவல்லாதிக்கம்,இந்திய வல்லாதிக்கத்தின் படை வல்லுனர்களால் பாதுக்காக் கப்பட்ட படைத் தளங்களை எல்லாம் அழித்து ஆயுத தளபாடங்களை கைப்பற்றி தமிழர் பிரதேசங்களை மீட்டெடுத்ததன் பிற்பாடு ஸ்ரீலங்கா படையின் படை இயந்திரத்தை இடுப்பொடித்து படுக்கவைத்த நிலையிலும் வெற்றியின் உச்சத்தில் நின்று கொண்டு பெரும் தன்மையுடன் இனத்தின் விடுதலைக்காக உங்களுக்கு விடுதலைப் புலிகள் போட்ட பிச்சைதான் கூட்டமைப்பு அன்றைய சூழலில் தலைவர் நினைத்திருந்தால் உங்கள் அனைவரையும் துரோகிகள் என்று சொல்லி அறிவித்து ஒதுக்கிவைத்துவிட்டு இந்த சமூகத்தில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த பலரை இந்த அரசியலில் சுதந்திரமாக போட்டியிட வைத்து இதே அங்கீகாரத்தினை பெற்றிருக்க முடியும்

உலகத்திற்கு தேவைப்பட்டது எல்லாம் ஒரு ஜனநாயகரீதியாக ஒரு தேர்தலுக்கு புலிகள் இடம் கொடுக்கவேண்டும் என்றுதான் அவர்கள் மக்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை விசுவாசத்தின் அடிப்படையில் மக்களிடம் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் கூட்டமைப்பிற்கு மக்கள் அந்த ஆதரவினை தந்தார்கள். விடுதலைப்புலிகள் நினைத்திருந்தால் உங்களையும் போட்டியிட விட்டு விட்டு எத்தனையோ விசுவா சமானவர்கள் இந்த மண்ணில் இருந்தார்கள் அவர்களை ஒன்றிணைத்து ஒரு கூட்டமைப்பாக தேர்தல் களத்தில் இறக்கி இருந்தால் நிச்சயமாக அந்த அணிக்குத்தான் மக்கள் ஆதரவினை வழங்கியிருப்பார்கள் நீங்கள் செல்லாக்காசுகளாக நிராகரிக்கப்பட்டிருப்பீர்கள் இந்திய வல்லாதிக்கத்தாலோ மேற்குலக வல்லாதிக்கத்தாலோ அந்த மக்களின் மனோநிலையினை வெல்லமுடியாத நிலைமையிலே புலிகளுடைய காலில் மண்டியிடவைத்து புலிகள் ஊடாக அங்கீகாரம் பெற்று இன்று புலிகளை அழித்துவிட்டு தமிழ் இனத்திற்கு துரோகம் செய்துகொண்டிருக்கின்றீர்கள் விடுதலைப்புலிகள் இந்தியாவிற்கு எதிரானவர்களும் அல்ல மேற்கு லத்திற்கும் எதிரானவர்களும் அல்ல இந்த சக்திகளை பகைக்கக்கூடாது என்பதற்காகவும் மாறானவர்கள் அல்ல என்பதை எடுத்துரைப்பதற்காகவே கூட்டமைப்பினருக்கு இந்த வாய்ப்புக்கள் கொடுக்கப் பட்டது இவர்கள் நிச்சயமாக இந்த தேசத்திற்கு மாறாக இருப்பவர்கள் என்பது தெரிந்திருந்தாலும் தங்களின் பலத்தினாலே மக்கள் ஒன்றாக நிக்கின்ற பொழுது இவர்கள் வாலாட்ட முடியாது என்பதை விளங்கிக் கொண்டு தமிழ்மக்களின் நலன்களை பலியிட்டு இவர்கள் செயற்படுத்து கின்ற காரியங்களை கட்டுப்படுத்த முடியும் என்ற ஒரு நம்பிக்கையுடன் தான் அந்த வாய்ப்பினை புலிகள் கொடுத்திருந்தார்கள்.

அது எங்களின் இனத்தினை பலியிடுகின்ற ஒரு நிலமைக்கு கொண்டு வந்து விட்டிருக்கின்றது என்பது கவலைக்குரிய விடயம் இதனை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பாட்டால் மாற்றங்களை உருவாக்க முடியும் மீண்டும் ஒருதடவை சொல்கின்றேன் வரப்போகும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பினை மக்கள் அனைவரும் நிராகரிப்பதற்கு தயாராக இருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# புதிய அரசியலமைப்பு: தடை விதித்தது மகாசங்கம் சங்கடத்தில் கூட்டமைப்பு

**பூமிகன்**

"புதிய அரசியலமைப்பு இப்போது அவசியமில்லை. தேர்தல்களை நடத்துவதே இப்போதைக்கு முக்கியம்" என இலங்கையின் மிகவும் சக்திவாய்ந்தவராகக் கருதப்படும் மல்வத்த மகாநாயக்கர் திபட்டுவாவே சிறி சுமங்கல தேரோ திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதாவது, அரசியலமைப்பு முயற்சிகளுக்கு மகாசங்கம் உறுதியான முறையில் தடைவிதித்துவிட்டது. அதற்குமேல்



ரணில் விக்கிரமசிங்கவோ அரசாங்கமோ நகரும் என எதிர்பார்க்க முடியாது. "புதிய அரசியலமைப்பு வரும், அது தீர்வைத் தரும்" எனத் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்குத்தான் பெரும் அதிரடியாக விழுந்திருக்கும்.

சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட ஐதேக எம்.பி.க்கள் சிலர் மல்வத்த மகாநாயக்கரை சந்தித்த போதே அவர், "புதிய அரசியலமைப்பு இப்போது அவசியமில்லை" என்பதை உறுதியாகக் கூறினார். புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு சிங்களக் கடும் போக்காளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு உருவாகியிருக்கும் பின்னணியிலேயே மகாநாயக்கரும் தனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக்கியிருக்கின்றார்.

மகாநாயக்கரின் இந்த நிலைப்பாடு ஐதேகவுக்கு சங்கடமான ஒரு நிலையைக் கொடுத்திருக்கும். அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகளைக் கைவிட்டுவிடுவதற்கும் அவர்களுக்கு இது உதவலாம். இது அதிகளவுக்கு நெருக்கடியைக் கொடுக்கப்போவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு எதிராக தென்பகுதியில் எழுந்திருக்கும் எதிர்ப்புக்களின் பின்னணியில், தமது நிலைப்பாட்டை மகாநாயக்கர்களுக்கு விளக்குவதற்காகவே ஐதேக அமைச்சர்களும் எம்.பி.க்களும் வெள்ளிக்கிழமை கண்டிக்குச் சென்று மகாநாயக்கர்களை சந்தித்தார்கள். மல்வத்த மகாநாயக்கரை மட்டுமன்றி, அஸ்கிரிய மகாநாயக்கரையும் அவர்கள் சந்தித்தார்கள். அஸ்கிரிய மகாநாயக்கருடனான அவர்களுடைய பேச்சுக்களின் விபரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

இலங்கை அரசியலமைப்பில் மகாநாயக்கர்களுக்கு என முக்கியமான இடமோ அந்தஸ்த்தோ உத்தியோகபூர்வமாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், எழுதப்படாத ஒரு சட்டமாக நாட்டின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் மகாநாயக்கர்களின் ஆலோசனையைப் பெறுவது வழமையாக இருக்கின்றது. புதிதாகப் பதவியேற்கும் அமைச்சர்கள், தலைவர்கள் முதலாவதாக மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசிபெறுவதும், ஆலோசனை கேட்பதும் வழமை. இந்த வழமை எழுதப்படாத ஒரு சட்டமாகிவிட்டது.

அரசாங்கம் ஒன்று இருந்தாலும், அதற்கும் மேலாக அதிகாரத்தைக் கொண்டவர்களாக மகாநாயக்கர்கள் இருக்கின்றார்கள். இலங்கை ஒரு சிங்கள — பௌத்த நாடாக இருப்பதால் மகாநாயக்கர்களுக்குச் சவால் விடும் வகையில் செயற்பட எந்தத் தலைவருமே முன்வருவதில்லை. அது தமக்கு ஆபத்தானது என்பது அவர்களுக்குத் தெரியும். அவ்வாறு செயற்பட்டால் தம்மீது தேசத்துரோக முத்திரை குத்தப்பட்டு, அரசியலிலிருந்து ஒதுங்கவேண்டிய நிலை வரலாம் என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கின்றது.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் மகாநாயக்கர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும், அதன் மூலம் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுத்தான் அடுத்த கட்ட நகர்வை முன்னெடுக்க முடியும் என்ற நிலையிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லை தலைமை— யிலான ஐதேக குழுவினர் மகாநாயக்கர்களைச் சந்தித்தார்கள். மகாநாயக்கர்களின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கும் என்பதை ஓரளவுக்குத் தெரிந்துகொண்டுதான் அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள் என எதிர்பார்க்கலாம்.

இதன்போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லை தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை. "அரசியலமைப்புக்கான நகல் யோசனை எதனையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது வழிநடத்தல் குழுவின் ஒரு அறிக்கை மாத்திரமே. எனவே, அரசியலமைப்புக்கான நகல் ஒன்று முன்வைக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் சொல்வது நியாயமற்றது" எனவும் அமைச்சர் கிரியெல்ல கூறியிருக்கின்றார். அதாவது, புதிய அரசியலமைப்பாக்க முயற்சிகளைப் பொறுப்பேற்க ஐதேக தயாராகவில்லை என்பது அவரது பதிலில் பிரதிபலித்தது.

"அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கபபட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன், பௌத்த மதத்துக்கான முதன்மை இடம், ஒற்றையாட்சி முறை என்பவற்றை மாற்றுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்" எனவும் கூறி மகாநாயக்க தேரரின் அச்சத்தை தணிக்க கிரியெல்ல முயன்றார்.

ஐதேக குழுவிலிருந்த ஏனையவர்களும் மகாநாயக்கர்களுக்குத் தெரிவித்த கருத்துக்களும் கவனத்துக்குரியவை. அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள அதி உயர் அந்தஸ்து தொடர்ந்தும் பாதுகாக்கப்படும் எனக் குறிப்பிட்டிருக்கின்றார் அமைச்சர் தயா கமகே. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என உறுதியளித்திருக்கின்றார் அமைச்சர் ரஞ்சித் மதும பண்டார. சமஷ்டிக்கு இதில் இடமே இருக்காது எனவும் அங்கு உறுதியளிக்கப்பட்டது.

இதனை மற்றொரு வகையில் பார்த்தால் "நாம் சிறுபான் மையினருக்கு எதனையுமே கொடுக்கப் போவதில்லை. நாம் எதனையும் கொடுத்துவிடுவோம் என நீங்கள் அஞ்ச வேண்டாம்" என்பதை மகாநாயக்கர்களிடம் உறுதியாகக் கூறிவிட்டுச் செல்வதற்காகத்தான் அவர்கள் கண்டிக்கு வந்திருந்தார்கள்.

அரசியலமைப்பு நகல் திட்டம் எதுவும் முன்வைக்கப்படாமல், நிபுணர்குழுவின் யோசனைள் வெளியிடப்பட்டுள்ள நிலையி லேயே இந்தளவு எதிர்ப்புக்கள் இனவாதிகளிடமிருந்து வருகின்றது. முக்கியமான தேர்தல்கள் எதிர்கொள்ளப்படும் நிலையில் ஐதேகவுக்கு இது கடினமான ஒரு நிலையைக் கொடுத்துள்ளது. நிலைமைகளைச் சமாளிப்பதற்கான ஒரு உபாயமாகத்தான் இதனை அரசாங்கத்தின் யோசனைகளாக வெளியிடாமல், நிபுணர்குழுவின் அறிக்கையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டார்.

தேர்தல்கள் எதிர்கொள்ளப்படும் நிலையில், அரசியலமைப்பு முயற்சிகளுக்கான எதிர்ப்பு ஐதேகவுக்குள்ளேயும் மேலோங்கியிருப்பதாக அமைச்சர் மனோ கணேசன் கூறியிருக்கின்றார். அதற்கும் மேலாக அரசியலமைப்பாக்க முயற்சிகளி லிருந்து ஐதேகவும் விலகிக்கொள்ள வேண்டும் என்ற அழுத்தமும் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இவை எல்லாவற்றையும் கவனத்திற்கொண்டுதான் மகாநாயக் கர்களை சந்தித்து, அவர்களுடைய உணர்வுகளை நாடிபிடித்துப் பார்ப்பதற்காகத்தான் ஐதேக உயர்மட்டக்குழு சென்றது. "இப்போதைக்கு புதிய அரசியலமைப்பு தேவை யில்லை" என மகாநாயக்கர் திட்டவட்டமாகக் கூறி— விட்ட நிலையில், ஐதேக அடுத்த காலடியை எடுத்துவைக்கும் என எதிர்பார்க்க முடியாது.



நடைபெறும் அரசியல் நகர்வுகளைப் பார்க்கும் போது இரு விடயங்கள் தெளிவாகத் தெரிகின்றது. முதலாவது, புதிய அரசியலமைப்பாக்க முயற்சிகள் அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போய்க் கொடிருக் கின்றது. இரண்டாவது, அவ்வாறு நகர்ந்தாலும் சிறுபான் மையினரைத் திருப்திப்படுத்தும் வகையில் அதில் எதுவும் இருக்கப்போவதில்லை.

இது ஒன்றும் புதிய விடயமல்ல. எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இதனைத் தெரிந்துகொண்டும் இப்போது கூட, "புதிய அரசியலமைப்பு வருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனச் சொல்லமுடியாது" என யாழ்ப்பாணத்தில் கூட்டம் போட்டு உரையாற்றும் சுமந்திரன் எதிர்பார்ப்பது எதனை?

# சனாதிபதியின் காலில் விழுந்து கதறிய எனது பேரப்பிள்ளைகளை அவர் ஏமாற்றிவிட்டார்.

## - ஆனந்த சுதாகரனின் தாயார் உருக்கம்.

தமது தந்தையை விடுவிக்குமாறு சனாதிபதியின் காலில் விழுந்து கதறிய எனது பேரப்பிள்ளைகளை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏமாற்றிவிட்டார் என ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் தாயார் திருமதி சச்சிதானந்தம் மனோசாந்தி என்பவர் கண்ணீர்மல்க தெரிவித்துள்ளார்.

இலக்கு மின்னிதழுக்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு



தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

**ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரருடைய மனைவியின் இறப்பின் பின்னர் பெற்றோர் இன்றி பரிதவித்துள்ள உங்கள் பேரப்பிள்ளைகளின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் உங்கள் கருத்து**

எனது மருமகள் யோகராணியின் இறுதி கிரியைகளுக்கு வந்து சென்ற எனது மகன் சுதாகரின் வருகையை அன்றைய தினத்தில் இருந்து இன்று வரை எனது பேரப்பிள்ளைகள் எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர்.

எனது பேரப்பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைக்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது. எனது மகன் சிறையில் இருந்தபோது எனது பேரப்பிள்ளைகள் பல்வேறு கஸ்ரங்களுக்கு மத்தியில் வாழ்ந்தாலும் அவர்கள் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தனர். எனது மருமகளின் இறப்பானது எனது பேரப்பிள்ளைகளை மிகவும் பாதித்துவிட்டது தாயும் இல்லாத சூழ்நிலையில் அவர்கள் தந்தையின் அரவணைப்புக்காக ஏங்குகிறார்கள். தினமும் தந்தையை கேட்டு அழுகிறார்கள் அவர்களைப் பார்த்து நானும் அழுவதை தவிர வேறு என்ன செய்யமுடியும். எனது பேரப்பிள்ளைகளுக்கு வந்த நிலமை உலகத்தில் எந்த பிள்ளைகளுக்கும் வரக்டகூடாது என்று அவர் கண்ணீர்மல்க தெரிவித்தார்.



**ஆனந்த சுதாகரின் விடுதலை தொடர்பில் இலங்கை ஜனாதிபதிக்கும் உங்கள் பேரப்பிள்ளைகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில்?**

எனது பேரப்பிள்ளைகள் மிகவும் எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் ஜனாதிபதியின் கால்களில் விழுந்து எங்கள் அப்பாவை விடுதலை செய்யுங்கள் என்று கதறி அழுது கெஞ்சினார்கள். உடனே சனாதிபதியும் தந்தையை விடுதலை செய்வதாக குழந்தைகளிடம் உறுதியளித்தார். ஆனால் அந்த வார்த்தைக்குரிய மதிப்பை அவர் இழந்துவிட்டார். எனது பேரப் பிள்ளைகளை அவர் ஏமாற்றிவிட்டார். இருப்பினும் சனாதிபதி விடுதலை செய்வார் என்ற நம்பிக்கையில் இன்றுவரை எனது பேரப்பிள்ளைகளும் நானும் காத்திருக்கின்றோம்.

**அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக அரசு மற்றும் தமிழ்த்தலைமைகள் எடுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகள் குறித்து உங்களின் கருத்து**

அரசியல் கைதிகள் தொடர்பாக நாளாந்தம் ஒவ்வொருவிதமான தகவல்கள் வெளிவருகின்றது. அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரசு கூறிவரும் அதே வேளை அரசியல் கைதிகளின் விடுதலையே எமக்கு முக்கியம் என தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

கைதிகளின் விடுதலை முக்கியம் என தெரிவித்துக்கொண்டு அரசுடன் இணைந்து தம்மையும் வளர்த்துக்கொள்கிறார்களே தவிர எமது கோரிக்கைகளை அரசிடம் எடுத்துக் கூறி அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான திட்டங்கள் எதனையும் எமது தலைவர்கள் இதுவரை செய்யவில்லை.

தமிழ் தலைமைகள் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்திருந்தால் கொழும்பிலே நெருக்கடி வந்த போது அரசியல் கைதிகளின் விடுதலை செய்யும் கட்சிக்கே எமது ஆதரவு என்று பகிரங்கமாக கூறியிருந்தால் நிச்சயமாக ஆட்சியை தக்க வைப்பதற்காக அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அவர்கள் உடன்பட்டிருப்பார்கள். இன்று அனைத்து கைதிகளும் விடுதலையாகி இருப்பார்கள் கிடைத்த மிகப்பெரிய சந்தர்ப்பத்தை அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பயன்படுத்துவதை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தவறி—விட்டார்கள். அரசியல் கைதிகளின் விடயத்தை வைத்து அரசியல் செய்பவர்கள் ஒருபோதும் அவர்களின் விடுதலைக்கு துணை போகமாட்டார்கள்.

**அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி மேற்கொள்ளும் போராட்டங்கள் பற்றி உங்கள் கருத்து**

அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக தமது உடலை வருத்தி கடுமையான போராட்டங்களை சிறைக்குள் முன்னெடுத்து வந்தார்கள். ஆனால் கைதிகளிட போராட்டங்களை அரசியல்வாதிகளே. உப்புச் சப்பற்ற உறுதி மொழிகளைக் கூறி தடுத்து நிறுத்தி அரசுடன் சேர்ந்து அவர்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்தி அவர்களை ஏமாற்றியுள்ளார்கள்.

கைதிகளின் விடுதலைக்காக போராடுபவர்கள் யாராக இருந்தாலும் இவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவாக மனிதாபிமான அடிப்படையில் வழிகளைத் தேட வேண்டும்.

**அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமானது என உங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றதா?**

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் முழு நம்பிக்கை உள்ளது. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என அரசே அறிவித்துள்ளது. இந்த நிலையில் ஏன் தற்போதுள்ள கைதிகளை விடுதலை செய்ய முடியாது? தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தில ஒன்றுபட்டு; குரல்கொடுத்தால் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியம்

தமிழ் தலைமைகள் அரசை காப்பாற்றுவதற்கான செயற்பாடுகளை மேற் கொள்கின்றார்களே தவிர மண்ணுக்காக போராடியவர்களை காப்பாற்ற முயற்சி செய்கிறார்கள் இல்லை. எமக்கு தீர்வு வேண்டும் என்றால் அனைத்தும் மாறவேண்டும். காலங்காலமாக மக்களுக்கு வாக்குறுதி அரசியல் மட்டுமே செய்துவரும் சகலரையும் மாற்ற வேண்டும். சமூகப் பொறுப்புள்ளவர்கள் அரசியல் தலைமையை ஏற்க வேண்டும். அப்போதுதான் இந்த குழந்தைகளின் ஏக்கங்கள் தீரும். இயல்பு வாழ்க்கை மலரும். இது நடக்க இறைவனை நம்புவோம். நிச்சயம் ஆனந்த சுதாகரன் போன்றவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என மேலும் தெரி—வித்தார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் வேண்டாம் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனே விடுதலை செய்யப்பட வேண்டும். போன்ற முழக்கங்களை முன்வைத்து இன்று மாலையில் யாழ் நகரின் மத்திய பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ளதைவிட புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் பல ஆபத்தான விடயங்கள் உள்ளதாகவும் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளை நசுக்கும் நோக்குடனேயே புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள்






தொடர்ச்சி 9 ஆம் பக்கம் →

# எந்தத் தேர்தல் ஆனாலும் எமக்கு வெற்றி நிச்சயம்

உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். கட்சியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் பற்றி எமது யாப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று எமது யாப்பானது இங்கு வாசித்துக் காட்டப்படும். குறிக்கோள்களை அடைவதற்கு உரிய வழிபடங்களை வரைந்து, உபாயங்களை வகுத்து, நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கவேண்டும்.

நோக்கு, உபாயம், செயற்பாடு என்ற மூன்றும் திடமாக வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தினால்த்தான் எமது பயணம் வெற்றியடையும்.

எமது செயற்பாடுகள் தூர நோக்கும், தெளிந்த சிந்தனையும், அரசியல் சாணக்கியமும் கொண்டவையாக அமையவேண்டும். எமது கட்சி மக்களால் வலுப்படுத்தப்பட்ட ஒரு கட்சியாகவும் அடிமட்ட மக்களின் ஆதரவில் தங்கியுள்ள கட்சியாகவும் கட்டியெழுப்பப்படுவதிலேயே எமது வெற்றி தங்கி இருக்கிறது. எமது மக்கள் தான் இந்தக் கட்சியை வழிநடத்தி செல்ல வேண்டும். அன்றொருநாள் என்னை வெளியேற்றச் சதிகள் செய்யப்பட்ட போது “நான் உங்களுடன் நிற்பேன்” என்று என் மக்களுக்கு நான் கொடுத்த என் வாக்குறுதியே இன்று ஒரு கட்சியாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

ஆகவே எம் மக்களின் சிந்தனைகள், ஆலோசனைகள் தாம் எம்மைப் பலப்படுத்தவேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே எமது கட்சி அடிமட்டத்தில் இருந்து கட்டி எழுப்பப்படும் ஒரு நிறுவன அமைப்பைக் கொண்டிருக்கின்றது. எமது சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு நாம் தீர்க்கலாம், எவ்வாறு எல்லா மட்டங்களிலும் உள்ள சமூக அலகுகளை நாம் பிரதிநிதித்துவஞ் செய்யலாம், எவ்வாறு அவர்களை உள்வாங்கி செயற்படலாம் என்ற கேள்விகளை நாம் அடிக்கடி எம்முள்ளேயே கேட்க வேண்டும். அவற்றை அவ்வாறு எழுப்பி உங்கள் செயற்பாடுகளை நீங்களே எம்முடன் கருத்துப் பரிமாறி நெறிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன்.

ஒழுக்கமும், துடிப்பும், சமூக சிந்தனையும் உள்ள இளைஞர், யுவதிகளை, பல்கலைக்கழக மாணவர்களை, முன்னாள் போராளிகளை எம்முடன் இணைத்து செயற்படவேண்டும் என்பதில் நான் கரிசனை காட்டி வருகின்றேன். எம்முடன் இணைந்துள்ள இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் காலக்கிரமத்தில் பலவற்றைச் சாதித்து காட்டுவார்கள் என்றும் பல விடயங்களில் முன்னுதாரணமாக நடந்து காட்டுவார்கள் என்றும் நான் திடமாக நம்புகின்றேன். என்னைப் போன்றவர்களின் வாழ் காலம் எத்தருணத்திலேனும் முடிவுக்கு வரக் கூடிய உச்சத்தை எட்டியுள்ளது. அடுத்துவரும் தமிழ்த் தலைமைகள் ஒழுக்கம், அர்ப்பணிப்பு, சமூகச் சிந்தனை கொண்டவர்களாக சுயநலம் களைந்தவர்களாக மிளிர வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த வேறுபட்ட சிந்தனைகளைக் கொண்ட பலரும் ஒரு கொள்கை அடிப்படையில் இந்தக் கட்சியில் ஒன்று சேர்ந்திருக்கின்றோம். ஆனால், கொள்கை ஒன்றென்றாலும் எமது தாகங்கள் வித்தியாசம், வேகங்கள் வித்தியாசம், சூழல்கள் வித்தியாசம். ஆகவே எமது செயற்பாடுகளுக்குள்ளே முரண்பாடுகள் ஏற்படக்கூடும், கருத்துவேற்றுமைகள் ஏற்படக்கூடும், சலிப்பு ஏற்படக்கூடும், ஏமாற்றம் வரக்கூடும், நம்பிக்கையீனம் ஏற்படக்கூடும். இந்த சவால்களை எல்லாம் கண்டு துவளாமல் அவற்றையெல்லாம் வெற்றிகரமாகக் கடந்து எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிசெய்யும் நாளைய தலைவர்களாக நீங்கள் மிளிர்வீர்கள் என்று நம்புகின்றேன். இங்குள்ளவர்களில் வயதில் மூத்தவன் என்ற அடிப்படையில் இவ்வாறான அறை கூவலை விடுக்க நான் தகுதியுடையவன் என்று நினைக்கின்றேன்.

முக்கியமாக மக்கள் என்ன சொல்கின்றார்கள் என்பதை அறிந்து சொல்லுங்கள். நிலத்தில் காதுவைத்து எமது பயணத்தைத் தொடர்வது அவசியம்.

நாம் தனியே தேர்தல் அரசியலுடன் நின்றுவிடக் கூடாது. சிலருக்குத் தேர்தலும், தேர்வும், அது வழியே வரும் அதிகாரங்களும் பதவிகளுமே முக்கியம். எம்மைப் பொறுத்த வரையில் எமது கொள்கைகளை வலுவாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது முக்கியம். எமது கொள்கைகள் எமது மக்களின் நீண்ட கால நலம் கருதியவை. ஆகவே நாங்கள் குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்களை வகுத்து அவற்றின் அடிப்படையில் செயற்படுவது முக்கியம்.

நாம் எம்மை மற்றவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட வேண்டும். எமது பயணம் மக்கள் நலம் என்ற இலக்கு நோக்கிய பயணமாக அமைய வேண்டும். அந்தப் பயணமே எமது தனித்துவத்தை உலகுக்குப் பறைசாற்ற வேண்டும்.

நாம் எமது அரசியல், சமூக, பொருளாதாரக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எமது கருத்துக்கள் சரியானவையாகவும் மக்களைத் தெளிவுபடுத்துபவைகளாகவும் வலுப்படுத்துபவைகளாகவும் இருக்கவேண்டும். உதாரணத்திற்கு எமது மக்களுட் சிலர் “நாங்கள் உங்களுக்கு வாக்குகளை அளித்தால் நீங்கள் எங்களுக்கு எதைத் தருவீர்கள்?” என்று கேட்பார்கள். அவர்கள் கட்சிகளிடம் இருந்து பிச்சை கேட்டே பழகிப் போனவர்கள். கட்சிகளும் பிச்சை போட்டு பிச்சை கேட்கும் பழக்கத்திற்கு ஆளானவர்கள். அவர்களிடம் வடகிழக்கு ஒருங்கிணைப்பு, சமஷ்டி அரசியல் யாப்பு போன்றவை எடுபடா. அவற்றைப் புரிந்து கொள்ளும் மனோநிலை கூட அவர்களுட் பலரிடம் இல்லை. எனவே அவர்கள் வழி சென்று அவர்களுக்கு வருங்காலம் பற்றியும் எமது நீண்டகாலக் கொள்கைகளின் அவசியம் பற்றியும் எடுத்துக் காட்ட வேண்டும். அதே நேரம் அவர்களின் நாளாந்தத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

எமது மத்திய குழுவில் பலவிதமான தொழில்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரை உள்ளடக்கியுள்ளோம். விவசாய ஒன்றியத்தலைவர், மீனவ சங்கத் தலைவர், வைத்தியர், சட்டத்தரணி, பொறியியலாளர், கட்டடக் கலைஞர், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், தொழிற்சங்கவாதிகள், கூட்டுறவாளர்கள், பத்திரிகையாளர்கள் என்று பலரும் எம்முடன் சேர்ந்து பயணிக்க முன்வந்துள்ளார்கள்.

பால்நிலை மற்றும் இளைஞர் யுவதிகள் சார்ந்த பிரதி நிதித்துவங்களை வலுவேற்றி வருகின்றோம். எவ்வாறு தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக நடைமுறையில் உள்ளதோ அதேவாறான சகல மட்ட மக்களினதும் ஆதரவும் எமக்குக் கிடைத்து வருகின்றது. ஞுறுசுஞு பண்டாரநாயக்க அவர்கள் 1956ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிடியை அரசியலில் தளர்த்த ஐவகையானோரைத் தனக்கு ஆதரவாளர்கள் ஆக்கினார். கமக்காரர், மீனவர், ஆசிரியர், சுதேச வைத்தியர்கள் மற்றும் பௌத்த சங்கத்தினரைத் தம்முடன் இணைத்து வெற்றி வாகை சூடினார். நாம் மேற்கூறிய பதினொரு வகையானோரை எமது ஆதரவாளர்களாக ஆக்கியுள்ளோம். ஆகவே எந்தத் தேர்தல் ஆனாலும் எமக்கு வெற்றி நிச்சயம்!

இன்று ஒரு பத்திரிகை எமது கட்சியில் ஜனநாயகம் பேணப்படுமா என்று கேள்வி கேட்டிருந்தது. கட்டாயம் பேணப்படும் என்பதை இப்பொழுதே கூறி வைக்கின்றேன். ஆனால் முதல் வருடத்தில் இவ்வாறான நியமனங்கள் செயலாளர் நாயகத்தினாலேயே செய்யப்படுவன. அடுத்த வருடம் தொடக்கம் யாப்பின் அடிப்படையில் வட்டாரம், தொகுதி, மாவட்டம் என்ற அடிப்படையில் கீழிருந்து நியமனங்கள் செய்யப்பட்டு அவ்வாறு வருபவர்கள் பொதுக் குழுவினுள் உள்ளடக்கப்படுவார்கள். பொதுக்குழு மத்திய குழுவைத் தேர்ந்தெடுக்கும். அப்போது என்னை செயலாளர் நாயகமாக நீங்கள் ஏற்க மறுத்தால் உங்கள் ஜனநாயக உரிமையே நடைமுறைப்படுத்தப்படும் என மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கிவைப்பு!



முல்லைத்தீவு மாவட்டம் வன்னிவிளாங்குளம் பாடசாலையில் கல்வி கற்கும் 45 மாணவர்களுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களினால் 17.01.19 அன்று மிதி—வண்டிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. வன்னிவிளாங்குளம் பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் அயல் கிராமங்களில் இருந்து பாடசாலைக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் போக்குவரத்து வசதி இன்றி நீண்ட தூரங்களில் இருந்து மாணவர்கள் கல்வி கற்க சென்று வருகின்றார்கள்.

இந்த மாணவர்களின் நலனினை கருத்தில் கொண்டு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டில் உள்ள அன்ரி அம்மா அவர்களின் நிதிப்பங்களிப்பில் ஆறு இலட்சத்தி நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான 45 மிதிவண்டிகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப் பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பாடாசலை சமூகம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். இந்நிகழ்வில் சிவசக்தி ஆனந்தன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மிதி—வண்டிகளை வழங்கிவைத்துள்ளார்.

## பிரித்தானியாவில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ கைது செய்யப்படவுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் தகவல்

பிரித்தானியாவில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ கைது செய்யப்படவுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.பிரித்தானியாவில் தமிழர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் போர்குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்படலாம் என தெரியவந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வினோத் பெரேரா மற்றம் பல்லியகுரு என்ற சிங்களவர்கள் இருவர் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன்போது பிரியங்க பெர்னாண்டோ கைது செய்யப்படலாம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாண சபைகளைக் கலைக்க அமைச்சரவைப் பத்திரம்

மூன்று மாகாணசபைகளை கலைத்து ஒரே நாளில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

சிறிலங்காவில் உள்ள ஒன்பது மாகாண சபைகளுக்கும், ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு வசதியாகவே, தற்போது, செயற்பாட்டு நிலையில் உள்ள, தென் மாகாண சபை, ஊவா மாகாண சபை, மேல் மாகாண சபை ஆகியவற்றைக் கலைக்க, சனாதிபதி அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளார்.

இது தொடர்பான ஆவணத்தில் அவர், பிலிப்பைன்ஸ் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னரே கையெழுத்திட்டுவிட்டார் என்றும், இந்த அமைச்சரவைப் பத்திரம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரும் ஏப்ரல் அல்லது மே மாதம், ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கு சனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

## மன்னார் புதைகுழி அகழ்வு இடைநிறுத்தம்!



மன்னார்— மனித புதைக்குழிகள் அகழ்வு பணிகள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அகழ்வு பணிகளுக்கு தலைமை தாங்கியுள்ள விசேட வைத்திய அதிகாரி, சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

132 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளில், 300 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பரிசோதனை நடவடிக்கைகளுக்காகத் தெரிவு செய்து வைக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் சில, வரும் 23ஆம் திகதி அமெரிக்காவின் ப்ளோரிடா மாநிலத்தில் உள்ள இரசாயன ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பி வைக்கவுள்ளன. பின்னர் இம்மாதம் 30ஆம் திகதியன்று அகழ்வு பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென்றும் வைத்திய அதிகாரி சமிந்த மேலும் தெரிவித்தார்

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜிந்துப்பிட்டி பகுதியில் இன்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் 34 வயதையுடையவர் என்றும் சிகிச்சைக்காக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

➔ 4ஆம் பக்கத் தொடர்ச்சி

## மன்னார் மனிதப் புதைகுழி சிறீலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான சாட்சியம்

சடலங்களைக் கொண்ட புதைகுழி கண்டறியப்பட்டபோதும் அதனை இனப்படுகொலை என தெரிவிக்க பின்னிற்கின்றன.

இது எமது விடுதலைப்போருக்கு அனைத்துலகத்தில் கிடைத்த மாபெரும் தோல்வி என்றால் அது தான் உண்மை.

சிங்கள அரசு தனது இனத்தை பாதுகாப்பதையும், தமிழ் இனத்தை அழிப்பதையும் தனது முழு வளங்களையும் பயன்படுத்தி மேற்கொண்டு வருகின்றது.

தென்னிலங்கையில் சிங்களவர்களுக்கு இடையில் ஏற்பட்ட நெருக்கடிகளை தமிழர் தரப்பைக் கொண்டே தீர்த்துக் கொண்டது. அதற்கு கூலியும் கொடுக்கவில்லை. அதன் பின் அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடாதிபதிகளின் ஊடாக அரசியல் திருத்தங்களில் ஏற்படுத்தப்படும் சிறு மாற்றங்களைக் கூட தடுக்க முனைகின்றது.

பெரும்பான்மைச் சிங்கள மக்களின் விருப்பத்திற்கு மாறாக சிறீலங்கா அரசு செயற்பட முடியாது என அவர்கள் அணமையில் தெரி—வித்துள்ள கருத்துக்கள் சிங்கள அரசின் அடுத்த காய்நகர்த்தல்களை தெளிவுபடுத்தியுள்ளது.

அது மட்டுமல்லாது தனக்கு சார்பான தமிழின விரோதிகளைக் கொண்டே மன்னார் புதைகுழி விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தவும் சிறீலங்கா அரசு முனைந்து வருகின்றது.




அதனை தான் சிங்கள அரசுக்கு ஆதரவாக இயங்கும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் என தன்னைக் கூறிக்கொள்ளும் பாக்கியசோதி சரவணமுத்து செய்துள்ளார்.

அதாவது மன்னார் புதைகுழியில் கிடக்கும் சடலங்கள் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டவர்கள் என தான் உறுதியாக நம்புவதாக பிரித்தானியா ஊடகம் ஒன்றிற்கு அவர் தெரிவித்துள்ளார்.

தமது இனத்தின் நன்மைக்காகவும், பாதுகாப்புக்காகவும் சிங்கள மக்கள் குரல் கொடுக்கின்றனர், பௌத்த துறவிகள் குரல் கொடுக்கின்றனர். தமது அரசியல்வாதிகளுக்கும் அரசுக்கும் அவர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர்.

சிறீலங்கா அரசு அனைத்துலக சமூகத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றது. அவர்களுடன் ராஜதந்திரப் பேரம்பேசல்களைச் செய்கின்றது.

ஆனால் நாமும் அனைத்துலகத்தில் இயங்குகின்றோம். பல பிரிவாக மற்றும் பல அமைப்புக்களாக ஆனால் எமது அமைப்புக்களால் எந்த ஒரு அழுத்தத்தையும் அனைத்துலக சமூகத்தில் ஏற்படுத்த முடியவில்லை.

கையில் ஏராளமான ஆதாரங்கள் இருந்தும் எமது செயற்திறனற்ற தன்மையால் அனைத்தும் வீணடிக்கப்படுவது ஒருபுறமிருக்க அவற்றை எமக்கு எதிராக திருப்புவதில் சிங்கள தேசம் வெற்றி கண்டு வருகின்றது.

இந்த மனிதப்புதைகுழியையும் விடுதலைப்புலிகள் தான் மேற்கொண்டார்கள் என அனைத்துலக சமூகத்தை நம்பவைப்பதற்கு சிறீலங்கா அரசுக்கு அதிக காலம் எடுக்கப்போவதில்லை. அதற்கு ஆதரவான அறிக்கைகளை விடுவதற்கும், அனைத்துலகத்தில் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கும் பல தமிழர்கள் தற்போதும் தயாராகவே உள்ளனர். அதில் ஒருவர் தான் சரவணமுத்துவும்.

# 2000 காளைகள் பங்கேற்ற உலக சாதனை சல்லிக்கட்டு



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் சல்லிக்கட்டு போட்டி இடம்பெற்றுவருகின்றது. சல்லிக்கட்டு போட்டியில் உலக சாதனையை ஏற்படுத்தும் விதமாக தமிழகத்தில் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை என்ற இடத்தில் 2000 காளைகள் பங்கேற்ற சல்லிக்கட்டு நிகழ்வு இன்று இடம்பெற்றுள்ளது. போட்டியை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தொடங்கி வைத்தார். போட்டியில் 1353 காளைகள் சீறிப்பாய்ந்து உலக சாதனை படைத்துள்ளதோடு நூற்றுக்கணக்கான வீரர்கள் காளைகளை அடக்கினார்கள். இதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதோடு பலர் காயமடைந்துள்ளார்கள்.

# வேலூர் சிறையில் முருகன் உண்ணாவிரதம்!

முன்னாள் பிரதமர் ராஜுவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள முருகன், விடுதலை செய்யக்கோரி வேலூர் சிறையில் உண்ணாவிரதம் இருந்தார். கடந்த 27 ஆண்டுகளாக சிறையில் உள்ள நளினி, முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை தொடர்பாக பல்வேறு தரப்பில் இருந்து தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், வேலூர் பெண்கள் சிறையில் நளினி முருகன் சந்திப்பு நேற்று காலை நடந்தது. இதற்காக பலத்த பாதுகாப்புடன் பெண்கள் சிறைக்கு முருகன் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நளினி முருகன் சந்திப்பு ஒரு மணி நேரம் நடந்தது. பின்னர், வேலூர் சிறையில் முருகன் அடைக்கப்பட்டார். இதனை தொடர்ந்து நேற்று பிற்பகல் முதல் தனது உண்ணாவிரதத்தை முருகன் தொடங்கினார். இரவு உணவும் அவர் சாப்பிடவில்லை.இன்று 2—வது நாளாக காலையிலும் அவர் உணவு சாப்பிடவில்லை. தொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். அவரை அதிகாரிகள் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக சிறைத்துறை வட்டாரத்தில் விசாரித்தபோது, தங்களது விடுதலையை முன் வைத்து முருகன் உண்ணாவிரதத்தை தொடங்கியுள்ளார். தங்களது மனுவின் மீது கவர்னர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

# தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற தமிழீழ அரசு உலகிற்கு முன்மாதிரியான அரசாக விளங்கியது.

## இலண்டனில் தமிழ்த்தேசியப்பேரியக்கத்தலைவர் பெ.மணியரசன் கருத்து

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டன் மாநகரில்13.01.2019 அன்றுபல்வேறுஅறக்கட் டளைநிறுவனங்கள்ஒருங்கிணைந்துதமிழர்தி ருநாளாம்தைப்பொங்கல்விழாவைமிகச்சிறப் பாககொண்டாடினர்.நூற்றுக்கும் மேற்பட்ட மண்பானையுடன் ஊர்கூடி பொங்கும் பிரம்மாண்ட தை பொங்கல்விழாவாக அது அமைந்திருந்தது.

அங்குள்ள பெரும் திடலில் பறையிசை முழங்க, தமிழ் மக்கள் குடும்பம் குடும்பமாக பொங்கல் வைத்துஉற்சாக பெருக்கோடுபொங்கல் விழாவைச் சிறப்புறக் கொண்டாடினர். ஆடல், பாடல், கருவி இசை,நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தமிழ்ப் பிள்ளை கள் சிறப்புடன் தங்கள் திறமைகளைவெளிப்படுத்தினர்.நிகழ்வில், இங்கிலாந்து வாழ் தமிழின உணர்வாளர்களும், தமிழ் மக்களும் திரளாகப் பங்கேற்றனர்.

இச்சிறப்பு மிகு விழாவில் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் ஐயா பெ. மணியரசன் உரையாற்றினார். அவ்வுரையின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

இங்கு நடைபெற்று வரும் பொங்கல் விழாவில் மகளிரும், ஆடவரும் மண்பானையில் பொங்கலிட்ட காட்சி என்றும் என் மனத்தைவிட்டு அகலாது! இப்படிச் சிலர் முன்முயற்சி எடுப்பதால்தான், நம்முடைய இனத்தின் வரலாறு, மரபு, பெருமிதங்கள் மீண்டும்மீண்டும் நினைவூட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழர்கள் எங்கிருந்தாலும்தமிழர்களே என்ற உண்மையை தமிழ் மக்கள் நிலைநாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு, உலகத் தமிழர்கள்நெஞ்சார மகிழ்வார்கள்!

நம்முடைய சான்றோர்கள், முன்னோர்கள் நமக்கு எல்லாவகையிலும்வாழ்வியலைக் கற்றுக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.தை முதல் நாள், இரண்டாம் நாள் எனத் தொடரும் நான்கு நாள் விழாக்கள் நம்வசந்த காலத் தொடக்கமாக இருக்கிறது. அந்த விழா நாட்களில் மனிதர்களுக்கு மட்டுமின்றி, கால்நடைகளுக்கும் பொங்கல் விழா!, கால்நடைகளைப் போற்றுகிறது தமிழினம்!

கலித்தொகையில் ஏறுதழுவல் பற்றிக் குறிப்புகள் உள்ளன. ஸ்பெயின் நாட்டில் காளையோடுசண்டையிடுகிறார்கள். நாம் காளையை கட்டித் தழுவுகின்றோம். அதைப் புண்படுத்தவில்லை;விளையாடுகிறோம்! அதனால்தான் ஏறுதழுவுதல் என்று நமது முன்னோர்கள் சொன்னார்கள். அப்படியாராவது துன்புறுத்தினால், அது மரபை மீறிய தவறு!

தமிழர் திருநாளை இசுலாமியர்கள், கிறித்தவர்கள் என அனைத்து சமயத்தினரும் தமது தேசியத்திருநாளாகக் கடைபிடிக்கிறார்கள்; கடைபிடிக்க வேண்டும்.


“பகுத்தறிவு” என்பதன் பெயரால் நாம்நம்முடைய மரபை — பழம் பெருமிதங்களை — கலை நயங்களை — பொறியியல் சாதனைகளை இலக்கியச் சிறப்புகளை — கலைச் செல்வங்களை அனைத்தையும் புறக்கணித்து விட்டோம். இனி அப்படிவிட்டுவிடக் கூடாது!

கடவுளை மறுப்பதும், ஏற்பதும் அவரவரது ஆய்வுக்கு உட்பட்டது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம்முன்வைக்கும் தமிழ்த்தேசியத்தில், கடவுளை ஏற் போரும் இருக்கலாம்; மறுப்போரும் இருக்கலாம். ஆனால்,ஒருவரை ஒருவர் இழிவுபடுத்திக் கொள்ளாமல் ஆயும் மனப்பக்குவமும் இருக்க வேண்டும்.

தமிழர்கள், எந்தக் கட்சியில் இருந்தாலும் தமிழர் என்ற இன உணர்ச்சியில் ஒன்றாக இருக்க வேண்டும்.இல்லையேல், எல்லாவற்றையும் இழந்துவிடுவோம். எதுவும் மிஞ்சாது! எங்கிருந்தாலும் நாம் தமிழ் கற்கவேண்டும்.

2009ஆம் ஆண்டு, தமிழீழத்தில் தமிழினப்படுகொலை நடந்தது. பகைவர்கள்நமக்கொரு பாடத்தைக் கற்பித்தனர். இந்தியா ஒருபோதும் தமிழர்க்கொரு தனிநாட்டை — தமிழீழத்தைஏற்காது! பல நாடுகள் சேர்ந்து கொண்டு, அந்தப் போரை நடத்தின. எட்டுக் கோடி தமிழர்கள் வாழ்ந்து வரும்தமிழ்நாட்டை ஆளும் இந்தியா அப்போரில் பெரும் பங்கு வகித்தது. இந்தியாவுக்கும் பாக்கித்தானுக்கும்ஆகாது என்றாலும், அவர்கள் அப்போரில் தமிழர்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்தனர். வடஅமெரிக்காவுக்கும்சீனாவுக்கும் ஆகாது என்றாலும், அவர்கள் அப்போரில் தமிழர்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்தனர். இப்படிமுரண்பாடானவர்கள் சேர்ந்து நம் இனத்தை அழித்தார்கள்.

சின்னஞ்சிறிய பகுதியில் தமிழீழதேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற தமிழீழ அரசு உலகின் முன்மாதிரி அரசாக — நாகரிகத்தை கடை பிடிக்கும் அரசாக சாதி நீக்கத்தை செயல்படுத்தியஅரசாக தீண்டாமையை, பெண் அடிமைத்தனத்தை ஒழித்த அரசாக நடைபெற்றது. அந்த அரசையேஅழித்தார்கள். ஈழத்தமிழர்கள் இன அழிப்புசெய்யப்பட்டது பேரிழப்பாக இருந்தாலும்ஈழத்தமிழர்போராட்டத்தின் விளைவாக நாம் ஒரு சர்வதேச சமூகமாகஒன்றிணைந்து நிற்கும் புதிய வாய்ப்புகளையும் பெற்றுள்ளோம். இன்றைக்கு தமிழ்ச்சமூகம், ஒரு உலக சமூகமாக



வளர்ந்திருக்கிறது

ஒவ்வொரு மாவீரர் நாள் உரையிலும் “தமிழீழம் இந்தியாவுக்குப் பாதுகாப்பாக இருக்கும்! இந்தியப்பெருங்கடல் பகுதியில், வேறெந்த சக்திகளும் காலூன்ற விடாமல் தமிழீழம் இந்தியாவுக்குப் பாதுகாப்புஅரணாக நிற்கும்” என்று தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் வாக்குறுதி அளித்தார். சொன்னதோடுமட்டுமல்ல, புலிகளின் அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், இந்திய அதிகாரிகளிடம் அதை நேரில்வலியுறுத்திப் பேசினார். ஆனாலும், இந்தியா அதை ஏற்கவில்லையே, ஏன்?

“எவ்வளவு முறை தவறு செய்தாலும் போரில் எதிர்த்து நின்றாலும் சிங்களன் நம்முடைய உடன் பிறந்தவன்.நமக்கும் அவனுக்குமான சண்டை — அண்ணன் தம்பி சண்டையைப் போன்றது! ஆனால், தமிழர்கள்எவ்வளவுதான் நட்புக்கரம் நீட்டினாலும் அவர்கள் நமக்குப் பகைவர்கள்! எனவே, தமிழர்களை நம்பமுடியாது; ஏற்க முடியாது!” என்பதே இந்தியாவின் உளவியல்! இந்தியாவால்தான் நாம் வீழ்த்தப்பட்டோம்என்பதை இன்றைய தமிழ் இளைஞர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்

தமிழ்நாட்டின்உரிமைகளை மறுப்பது, உச்ச நீதிமன்றமோ தீர்ப்பாயமோ தீர்ப்பு வழங்கினால் கூடகாவிரிச் சிக்கலில் அதைச் செயல்படுத்த மறுப்பது, மற்ற மாநிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லதுஅனுமதி மறுக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலை, கூடங்குளம் அணு உலை, ஐட்ரோகார்பன், எட்டுவழிச் சாலைபோன்ற திட்டங்கள் தமிழ்நாட்டில் திணிக்கப் படுவது போன்றவை தமிழ்நாட்டு இளையோரிடையேஒருபுரிதலை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய அரசு நம்மை இனப்பாகுபாட்டோடு நடத்துகிறது என நம்இளைஞர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். உலகத் தமிழர்களுக்கு இரண்டு தாயகங்கள் இருக்கின்றன. ஒன்று தமிழ்நாடு, இன்னொன்று தமிழீழம்!இவை இரண்டிலும் நாம் வலிமையும் பாதுகாப்பும் ஒற்றுமையும் பெற்றால்தான், உலகத் தமிழர்கள்பாதுகாக்கப்படுவர். எனவே, தமிழ்நாடு — தமிழீழத் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்கு அக்கறை யோடுபோராட வேண்டும். நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்க வேண்டும். இவ்வாறு தோழர் பெ. மணியரசன் பேசினார்

# மத்திய தரைக்கடலில் கப்பல்கள் மூழ்கியதில் 170 அகதிகள் உயிரிழப்பு?



மத்திய தரைக்கடல் பகுதியில் நடந்த இருவேறு கப்பல்கள் கவிழ்ந்த சம்பவங்களில் 170 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் தெரிவித்துள்ளது. சுமார் 117 பேர்கள் இருந்த கப்பலொன்று லிபிய கடற்பரப்பில் மூழ்கியதாக இத்தாலியின் கடற்படை தெரிவித்துள்ளது.ஆனால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லை என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் கூறுகிறது.

53 பேரோடு பயணித்துக்கொண்டிருந்த மற்றொரு கப்பலொன்று, மத்திய தரைக்கடலின் மேற்குப்பகுதியிலுள்ள அல்போரான் கடற்பரப்பில் காணாமல் போனதாக கூறப்படுகிறது.கப்பல் கவிழ்ந்தபோது உயிர் தப்பி சுமார் 24 மணிநேரங்கள் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த ஒருவர் காப்பாற்றப்பட்டு மொரோக்கோவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். இருந்தபோதிலும், முழு கப்பலும் மிகச் சரியாக எந்த பகுதியில் கவிழ்ந்தது, அதிலிருந்தவர்களின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து எந்த தகவலும் இல்லை. இரண்டாவது கப்பல் கடந்த சனிக்கிழமையன்று லிபியாவிலிருந்து புறப்பட்டதாக இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரி—வித்துள்ளது.

அந்த கப்பல் லிபியாவின் கரபுள்ளி என்னுமிடத்திலிருந்து புறப்படும்போது அதில் 120 பேர் இருந்ததாக விபத்திலிருந்து உயிர் பிழைத்த மூன்று பேர் தெரிவித்துள்ளதாக அந்த அமைப்பின் செய்தித்தொடர்பாளர் பிளாவியோ டி கியாகோமோ என்று கூறியுள்ளார். இந்த ஆண்டின் முதல் 16 நாட்களில் மட்டும் சுமார் 4,216 குடியேறிகள் இந்த கடற்பகுதியை கடந்து சென்றுள்ளதாகவும், இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இரண்டு மடங்குக்கும் அதிகமாகும் என்று இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. சமீப ஆண்டுகளாக இத்தாலி உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகள் அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றன.

## சிலி நாட்டில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

தென்அமெரிக்க நாடான சிலியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.7 ஆக பதிவாகியுள்ளது.

தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டில் உள்ள கோகியும்போ கடற்கரை பகுதியில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில், 53 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோளில் 6.7 ஆக பதிவானது. அதிகாலையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்து வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

நிலநடுக்கத்தால் இருவர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இருப்பினும் அதிகாரப்பூர்வமாக அரசு இன்னும் எந்த சேத விபரங்களையும் தெரிவிக்கவில்லை.

இதே போல், கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பு நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது, ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவானது.

## அடுத்த மாதம் டிரம்ப், கிம் ஜாங் உன் மீண்டும் சந்திப்பு - வெள்ளை மாளிகை அதிகாரபூர்வ அறிவிப்பு



இரு துருவங்களாக விளங்கி வந்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன்னும் உலகமே வியக்கிற வகையில், கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12—ந் திகதி சிங்கப்பூரில் நடந்த உச்சி மாநாட்டில் சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்பின்போது, இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

அதில், கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதங்களை முழுமையாக ஒழிப்பதற்காக உழைப்பது என டிரம்பும், கிம்மும் உறுதி எடுத்துக்கொண்டனர். ஆனால் அந்த ஒப்பந்தத்தின்படி, அணு ஆயுதங்களை முழுமையாக கைவிடுவதற்கு வடகொரியா உறுதியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அமெரிக்கா கருதுகிறது. இருப்பினும், மீண்டும் உச்சி மாநாடு நடத்தி டிரம்பை சந்திக்க கிம்ஜாங் உன் விருப்பம் தெரிவித்தார்.

இந்த நிலையில், அவரது சிறப்பு தூதரான கிம் யாங் சோல், நேற்று முன்தினம் வாஷிங்டன் சென்று டிரம்பை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது அவர், டிரம்பிடம் கிம் ஜாங் உன் தந்து அனுப்பிய கடிதத்தை வழங்கினார். அதைத் தொடர்ந்து, அணு ஆயுத கைவிடல் தொடர்பாக அடுத்த மாத (பிப்ரவரி) இறுதியில் இரண்டாவது உச்சி மாநாடு நடத்தி டிரம்பும், கிம் ஜாங் உன்னும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என்று வாஷிங்டன் வெள்ளை மாளிகை செய்திதொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். இது தொடர்பாக அவர் கூறும்போது, "அணு ஆயுத கைவிடல் விவகாரத்தில் நாங்கள் தொடர்ந்து முன்னேற்றம் காண விரும்புகிறோம். நாங்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துகிறோம்" என குறிப்பிட்டார். அதே நேரத்தில் இரண்டாவது உச்சி மாநாடு எங்கே நடத்தப்படும் என்ற விவரம் இன்னும் வெளியிடப்படவில்லை

## நோர்வேயில் அதிக குழந்தை பெறச்சொல்லும் பெண் பிரதமர்



நோர்வேயில் பிறப்பு வீதம் குறைவாக இருந்தால் இனி வரும் காலத்தில் ஏராளமான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் என்பதால் நாட்டிற்கு அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் தேவை என நோர்வே பிரதமர் கூறி உள்ளார். ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வேயில் எர்னா சோல்பெர்க் என்ற பெண் தலைவர் பிரதமராக உள்ளார்.

சமீபத்தில் அவர் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார். அந்தச் செய்தியில் அவர், "நமது நாட்டுக்கு இப்போதைய தேவை அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள்தான். இதை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்பதை நான் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்" என கூறி உள்ளார்.

மேலும் "இனி வரும் காலத்தில், இதேபோல் நாடு இருந்தால் (பிறப்பு வீதம் குறைவாக இருந்தால்) நாம் ஏராளமான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்" எனவும் அவர் எச்சரித்துள்ளார். இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பொதுவாக நோர்டிக் நாடுகள் என்று அழைக்கப்படக்கூடிய நோர்வே, சுவீடன், டென்மார்க் , பின்லாந்து, ஐஸ்லாந்து நாடுகளில் குழந்தைகள் பிறப்பு வீதம் குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொலிவியாவில் இரண்டு பேருந்துகள் நேருக்குநேர் மோதல்: 22 பேர் பலி – 37 பேர் காயம்



பொலிவியாவின் தலைநகர் லா பஸ்ஸில் இருந்து சுமார் 250 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகரம் சல்லபட்டா. இங்கு நேற்றிரவு இரண்டு பேருந்துகள் நேருக்குநேர் மோதின. இதில் 22 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 37 பேர் காயமடைந்தனர்.காயம் அடைந்தவர்களில் மிகவும் மோசமான நிலையில் இருப்பவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சல்லபட்டா மேயர் தெரிவித்துள்ளார்.

# இந்தப் பழங்குடிகள் போராட்டம் காடுகளின் நலனுக்காக!"
# - பாதுகாக்கப்பட வேண்டியவர்களின் கதை

உலகின் பல்லுயிர்ச்சூழல் மிகுந்த 80 சதவிகிதம் காடுகளில் பழங்குடிகள் வாழ்கிறார்கள். அவர்களின் பாதுகாப்புதான் நம் எதிர்காலத் தலைமுறைகளிடம் வனங்களையும் வளங்களையும் பத்திரமாகக் கொடுப்பதற்கு இருக்கும் ஒரே வழி.

பழங்குடிகள் இல்லையேல் காடு இல்லை. பழங்குடிகள் இல்லையேல் இயற்கை இல்லை . பழங்குடிகள் இல்லையேல் எதிர்காலமே இல்லை இதையுணர்ந்து நாம் செயல்படுகிறோமா என்றால் அதுவும் இல்லை

உலகின் பல்லுயிர்ச் சூழல் மிகுந்த 80 சதவிகிதம் காடுகளில் பழங்குடிகள் வாழ்கிறார்கள். தங்கள் நிலத்தில் யானை மந்தைகள் உலவிக் கொண்டிருக்கும். புலிகள் வந்துபோகும். மான்கள் மேய்ந்து கொண்டிருக்கும். குரங்குகள் விளையாடிக்கொண்டிருக்கும். பறவைகள் கொஞ்சிக் கொண்டிருக்கும். காட்டு மாடுகள் இளைப்பாறிக் கொண்டிருக்கும். அவற்றோடு அவர்களும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் அவர்களை வைத்துள்ளோம். உண்மையைச் சொல்லப்போனால் உழைக்கும் சமூகங்களும், உழைப் போடு செறிவான இயல் அறிவுக் களஞ் சியத்தையும் ஆயிரமாண்டுகால வரலாற்றையும் கொண்ட பழங்குடிச் சமூகங்களும்தான் உயர்ந்தவர்களாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள். அந்த இரண்டு சமூகங்களும் இல்லையேல் இந்தப் பூமியின் மனித இனத்தின் இயக்கமே அவ்வளவு ஏன் இருப்பே இல்லாமல் போய்விடும். சரக்குகளில் தேவைகளுக்கு ஏற்ப அதிக மதிப்பளிக்கும் நாம், மனிதச் சமூகத்தின் நலனுக்கும் இயற்கைப் பாதுகாப்புக்கும் தவிர்க்கமுடியாமல் தேவைப்படும் இவர்களுக்கு மதிப்பளிக்கத் தவறிவிட்டோம்.

உலகிலேயே குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே பார்க்கக்கூடிய எண்டெமிக் உயிரினங்கள் மற்றும் தாவரங்கள். இந்த அனைத்து விவரங்களையும் முழுமையாக நமக்குக் கொடுத்தவர்கள் பழங்குடிகள். அவர்களோடு ஏற்பட்ட உறவே பல ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளுக்கு உதவியது. இன்றளவும் அவர்களின் உதவியை நாடிச் செல்லும் ஆய்வாளர்கள் பலரும் உண்டு. இவ்வுலகின் அரும்பெரும் தாவரவியலாளர்களை உயிரியலாளர்களை நாம் இழந்துகொண்டிருக்கிறோம். அவர்களை அழிப்பது மட்டும் அழிவல்ல. அவர்களின் கலாச்சாரத்தை அதன்மூலம் அவர்களின் அறிவுப் புதையல்களை அழிப்பதும் இன அழிப்புதான். ஓர் இனத்தை அழிக்க வேண்டுமென்றால் அதன் மொழியில் உள்ள புத்தகங்களை அழிக்கவேண்டும். ஹிட்லரும், இலங்கையும் அதையே செய்தன. இவர்களின் நூலகம் இந்தக் காடுகளே. அதைவிட்டுத் துரத்துவதும் அவர்களை அழிப்பதும் ஒன்றுதான்.

`சுற்றுச்சூழல் பாதுகாப்பு', `பல்லுயிர்ச் சூழல் மற்றும் உயிரினங்கள் பாதுகாப்பு' போன்றவற்றை நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். ஆண்டாண்டு காலமாக அதைச் செயலில் காட்டிக் கொண்டிருந்தவர்கள் பழங்குடிகள். அவர்கள் சூழலின் செறிவையும் வளத்தையும் பாதுகாக்கப் பல நுட்பமான முயற்சிகளைச் செய்தவர்கள். அதீத வேட்டையைத் தடுக்கவும், பல்லு—யிர்ச்சூழலைப் பாதுகாக்கவும் அவர்களிடம் பல அனுபவபூர்வமான திட்டங்கள் உள்ளன. நாம் அதை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டோம். காரணம், நாம் அவர்களைவிட அறிவிலும் நாகரிகத்திலும் உயர்ந்தவர்கள் என்ற ஆணவம். ஆங்கிலேயர்களிடமிருந்து தொற்றிக்கொண்ட கர்வம். நாம் ஒவ்வொருவருமே அந்தக் கர்வத்தையும் ஆணவத்தையும் தூக்கியெறிந்து அவர்களிடம் சென்று அறிவுப்பிச்சைக் கேட்டு நிற்கவேண்டியவர்கள். ஒரு மரத்தின் மொழியைப் புரிந்துகொள்ளும் திறன்வாய்ந்த பழங் குடிகளைவிட, தேவைக்குமேல் எடுக்கக் கூடாது என்ற பக்குவமுடைய பூர்வ குடிகளைவிட நாம் எந்த வகையில் அறிவார்ந்த சமூகமானோம்? தன்னோடு வாழும் மனிதனற்ற ஒவ்வோர் உயிரையும் மதித்து வாழப் பழகிய அவர்களைவிட நாம் எந்த வகையில் நாகரிகமடைந்தவர்கள்?"

நாம் `காடு' என்று எதைச் சொல்கிறோமோ அதைத்தான் பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்கள் ஊராக, கிராமங்களாகப் பார்க்கிறார்கள். அடர்ந்த மரங்களையும் சில பாம்புகளையும்,



**எந்தவொரு நாட்டிலும் பழங்குடிகள் நிம்மதியாக வாழவில்லை. இதுதான் நிதர்சனம்.**

பறவைகளையும் பார்த்துவிட்டாலே அதைக் காடென்று சொல்லும் அற்பமான நமக்கு அவர்கள் காட்டுவாசிகள்தான். இயற்கைக்குச் செல்லப்பிள்ளைகளும் அந்தக் காட்டுவாசிகள்தான். அதையும் மறந்துவிடாதீர்கள். உலகின் அடர்ந்த காடுகளாக நாம் பார்க்கும் அமேசான், செரெங்கெட்டி, தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை போன்றவற்றில்கூட ஆயிரக்கணக்கான பூர்வகுடிக் கிராமங்கள் இருந்தன. அவர்கள் அந்தக் காட்டை அதில் வாழ்ந்த உயிர்களைப் பல்லாயிரம் ஆண்டுகளாக, பல தலை முறைகளாகப் பாதுகாத்து வந்தார்கள். இன்று அவர்களுடைய சந்ததிகளுக்குக் காடு அந்நியமாகிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், முன்னேற்றம் என்ற பெயரில் அவர்கள் காட்டைவிட்டு வெளியேற்றப் படுவதுதான். இன்னும் ஒருபடி மேலே போய் சட்டரீதியாகவே பல இடங்களில் அவர்களை வெளி யேற்றுகிறார்கள். அதற்கு அரசு சொல்லும் காரணம் வனப்பாதுகாப்பு. தாம் வாழும் காட்டைப் பற்றிய மொத்தத் தரவுகளையும் தன்னுள் வைத்திருக்கும் அந்தப் பொக்கிஷங்களை விடவா உங்களால் காட்டைச் செழுமையாகப் பார்த்துக்கொள்ள முடியும்?

உலகம் முழுவதுமுள்ள முப்பது கோடி பழங்குடிகளில் பாதிப்பேர் ஆசியாவில்தான் வாழ்கிறார்கள். மத்திய மற்றும் தென்னமெரிக்காவில் மூன்று கோடி மக்கள் வாழ்கிறார்கள். அதுபோக ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, நியூசிலாந்து போன்றவற்றில் பலர் வாழ்கிறார்கள். அவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே இதுபோன்ற இடப்பெயர்வுகளுக்கு ஆளாகிறார்கள். இல்லை தம் வீடுகளிலிருந்து தூக்கி வீசப்படுகிறார்கள். பணம் கொடுத்துவிட்டு ரகசியமாக வேட்டையாடிச் செல்பவர்கள் இருந்து கொண்டேயிருக்க, இவர்களில் பலரும் வேட்டை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுக் குற்றவாளிகள் ஆக்கப்படுகிறார்கள். எதிர்த்துப் போராடுபவர்கள் தடியடிக்கும், சித்ரவதைகளுக்கும் ஆளாகிறார்கள். பலரும் கொல்லப்படுகிறார்கள். ஜார்கண்டில் கொல்லப்பட்ட அமித் டோப்னோ, கனடாவில் கொல்லப்பட்ட அந்நாட்டின் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த கிரிஸ்டினா கில்டி என்று அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

கேமரூனில் பாக்கா என்ற பழங்குடிகள் காட்டுக்குள் சென்றனர். உலகக் காட்டு—யிர்கள் பாதுகாப்பு அமைப்பைச் (WWF) சேர்ந்த வேட்டைத்தடுப்புக் காவலர்கள் துன்புறுத்தி மிரட்டி இனி அங்கு வரவே கூடாதென்று அனுப்பி வைத்தனர். இந்தியாவில் புலிகள் சரணாலயங்கள் என்பதற்காகப் பழங்குடிக் கிராமங்களைக் காலிசெய்து ஊருக்குள் அனுப்பினார்கள். அதேசமயம், சூழலியல் சுற்றுலா என்ற பெயரில் ஊர் மக்களிடம் காசு வாங்கிக்கொண்டு காட்டுக்குள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நாம் என்னதான் செய்து கொண்டிருக்கிறோம்? புலிகள் சரணாலயங்களாக, பாதுகாக்கப்பட்ட மண்டலங்களாக இவை மாற்றப்பட்டது சமீபத்தில் தான். பல நூறு ஆண்டுகளாக அங்கு புலிகள் ஆயிரக்கணக்கில் இருந்தன. அப்போதெல்லாம் அந்த மக்கள் அங்குதானே வாழ்ந்தார்கள்! இயற்கையின் வழியில் நாம் செல்வதில்லை. அவளை அவளின் பிள்ளைகளை நம் வழிக்கு இழுத்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் நாம் செய்யும் பாதுகாப்பு நடவடிக்கைகளா!

உலகளவில் வாழும் பூர்வகுடி மக்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கள் வாழ்வியலைவிட்டு காட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் வாழ்வு காட்டுக்கும் அதன் பாதுகாப்புக்கும் விரோதமாக மாறிக் கொண்டிருக்கிறது. அடர்த்தியான பல்லு—யிர்ச்சூழல் மிகுந்த காடுகளைப் பாதுகாத்து வாழ்ந்த மக்களை அதற்கு எதிராகவே வாழவைத்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் நம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறை. ஒரு நாட்டில்கூடப் பழங்குடிகள் நிம்மதியாக வாழவில்லை. அதுதான் நிதர்சனம். அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்தக் குற்றங்களுக்குக் காரணமும் நாம்தான். அவர்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை எதிர்த்துக் கேள்வி கேட்காத நாம்தான் குற்றவாளிகள். சுற்றுச்சூழல் பாதுகாப்பில், வனப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் நிபுணர்களான பழங்குடிகளிடம் நன்றியுணர்வோடு நடந்துகொள்ள மறுத்து விட்டோம். எனில் நாம்தான் குற்றவாளிகள்.

நீங்கள் அவர்களின் நிலத்தைக் கேட்கிறீர்கள். அது வெறும் நிலமாக, காடாகத் தானே தெரிகிறது! ஆனால், அவர்களைப் பொறுத்தவரை அதுதான் அவர்களின் அம்மா. அங்கு வாழும் அனைத்துமே அவளுக்குப் பிறந்தவைதாம். அந்த அனைத்தையுமே காக்கும் பொறுப்பு அவளினது என்று நினைப்பவர்கள். நீங்கள் அவர்களின் நிலத்தைக் கேட்கிறீர்கள். அம்மாவிடம் இருந்து பிரிந்து விடுமாறு பிள்ளைகளிடம் கேட்கிறீர்கள். எதற்காக? அம்மாவாக நினைக்கும் அந்த நிலத்தை வைத்துச் சுற்றுலா, தொழிற்சாலைகள் போன்றவற்றால் காசுபார்க்க நினைக்கிறீர்கள். அவர்களின் அம்மாவை வைத்துக் காசு பார்க்க நினைக்கிறீர்கள். அதை அவர்கள் அருவருப் பாகத்தான் பார்ப்பார்கள். அதை எதிர்த்துப் போராடத்தான் செய்வார்கள். நன்றியுள்ள எந்த மனிதனும் அந்தப் போராட்டத்தை ஆதரிக்கவும் உடன் நிற்கவுமே செய்வான்.